Free Circulation Germany- England
மணி: 70 - ஓசை: 288 புரட்டாசி. September. 2020

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
Successful Publishing 26 years IN EUROPE
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A




Dr.IN



## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களத்தில் ஈழத்துப் பெண் ரோகினி




## அரசியல் களம்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி



## நன்றியுணர்வு நலிந்து போகிறதா?

# எனக்கு எல்லாம் தெரியும் எனக்குத்தான் எல்லாம் தெரியும்


ஓவியம்: கண்ணா


மாதவி

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு. இன்று இலத்திரன் ஊடகங்களின் பெரும் படையெடுப்பின் காரணமாக உலகம் சிறுத்துவிட்டது. உலகின் எந்த மூலையில் எது நடந்தாலும் செய்தி உடன் உள்ளங்கைக்குள் வந்துவிடும். அது உண்மையோ பொய்யோ அது பற்றி எவருக்கும் கவலைகிடையாது. முதல் சொல்பவனையே உலகம் கவனிக்கிறது. அது அம்ஸ்ரோங் முதல் இன்று வரை வெகு ஸ்ரோங்காகப் பதிந்துவிட்ட ஒரு காரியம். உலகத்தையே முற்றுமுழுதாக அறிந்துவிட்டதாக ஒருவித நினைப்புக் குடிகொண்டுவிட்டது. எனக்குத் தெரியும் என்பதில் இருக்கும் இன்பம் வேறு எதிலும் இல்லை. அந்த இன்பத்தை அடையவே பல இடங்களில் மனிதன் மூக்கை நுழைக்கின்றான்.

ஒரு மனிதன் சாப்பிடுவதற்காக மட்டும் அல்ல. தன்னைப்பிறரிடம் இருந்து வித்தியாசப்படுத்திக்காட்டவும் எதோ ஒரு வகையில் பிறரைவிட தான் உயர்ந்தவன் பலவற்றை அறிந்தவன் என்பதை விளக்கவே வாயைத் திறக்கின்றான். மனிதர்களின் செயற்பாடுகளை சற்று அவதானித்துப் பார்த்தால் இவை நன்றாகவே தெரியும்.

நீங்கள் ஒரு தகவலைச் சொல்லிப்பாருங்கள். அல்லது எழுதிப்பாருங்கள் [ இன்று எந்தச்செலவும் இல்லாமல் எழுத ஆயிரம் வழிகள் உண்டு அல்லவா] அதனைக் கேட்டதும் அல்லது வாசித்ததும் கேட்பவர் வாய் திறப்பார். அல்லது ஒரு பதிவிடுவார். அதில் நீங்கள் சில விடையங்களை நோக்கி இருப்பீர்கள், அல்லது இனி நோக்குங்கள்.

01.இந்த தகவல் எனக்கு முதலேதெரியும் என்பதனைக் காட்ட முயல்வார்.

02.அந்த தகவலோடு சேர்த்து தனது அறிவைப் புலப்படுத்த மேலும் சில தகவல்களை சொல்வார், அல்லது எழுதுவார்.

03.சிலர் ஏதும் பேசவும் மாட்டார்கள். எந்தப் பதிவும் இட மாட்டார்கள் அமைதிகாப்பார்கள். அதன் அர்த்தம் உங்கள் பேச்சோ பதிவோ சரியானது என்பது அந்த மௌனம் சொல்லும் பதில் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள், அந்தமௌனம் ஒரு எரிமலைக்குச் சமம். ஆனால், வெளியில் தெரியாது.

04.மேற்குறிப்பிட்ட வகையினரைத் தவிர இப்போது குறிப்பிடப்படும் இவர்கள்தான் மிக மிக ஆபத்தானவர்கள். நாம் எமது அனுபவத்தில் எனக்கு யாவும் தெரியும் என்று சொல்பவர்களை விட, எழுதுபவர்களைவிட, எனக்குத்தான் தெரியும் என்று எண்ணுபவர்களையே நாம் அதிகமாகச் சந்தித்திருப்போம்.

மேற்குறிப்பிட மூன்று வகையினரும் பிறரைக் காயப்படுத்தினாலும் அவை புறக்காயமாகவே இருக்கும். ஆனால், இந்த நான்காவது பிரிவினர்களான எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற பிரிவினர்கள் உள்காயங்களை ஏற்படுத்த வல்வர்கள். பலரது தன்னம்பிக்கையை வேரோடு பிடுங்கி எறியும் ஆற்றல் மிக்கவர்கள். சுயமான சிந்தனைகள் ஒருவரிடத்தில் ஏற்படாவண்ணம் மட்டம் தட்டுவதும், ஒருவித மலட்டுத்தன்மையை அவர்களுக் ஏற்படுத்துவதிலும் வல்வர்களாக இருப்பார்கள்.

வாழ்கையில் எதிர்மறையான சிந்தனைகள் உடையவர்களது சகவாசத்தை குறைத்துக்கொள்ள வேண்டும் என்பது எவ்வளவு நல்லதோ! அதனை விடச்சிறந்தது எனக்குத்தான் தெரியும் என்பவர்களது நிழலையும் தொடாது நகர்வது.

புத்தகங்கள் வாசிப்பது உண்மையில் சிறப்பானதே! அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது அதுவும் தெய்வ வாக்கிற்கு ஒப்பானதே!

ஆனால், இந்த வாசிப்பு பிறருக்கு தன்னை நாலும் தெரிந்தவன், எனக்குத்தான் தெரியும் என்பதனைப் புலப்படுத்த மட்டுமே பயன்படுமானால் அந்த வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமனிதனாக்காது. ஒருவன் வாசிப்பின்மூலம் முதலில் தன்னைப் பூரணப்படுத்த வேண்டும்.

உங்கள் வீட்டிலோ அல்லது அருகிலோ ஒரு வயோதிபர் பேச்சுத்துணையின்றித் தவிக்க பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒருவருடன் உங்கள் ஆற்றலை காட்டுவதற்காக மணிக்கணக்காக கதைப்பது உங்கள் அகத்தை மகிழ்விக்குமா?

அதிகம் வாசிப்பவனதும் கண்காட்சிகள் பார்ப்பவனதும் படைப்புகளில் சொந்தக்கருத்துகள் மந்தமாகவே இருக்கும். பிறரது அனுபவங்கள் படைப்புக்கள் உங்களுக்குள் ஒரு சுயமான உணர்வை உருவாக்க மட்டுமே அவற்றை உள்வாங்கவேண்டும். அதன் மூலம் பிறக்கும் உங்கள் படையல்கள், பேச்சுக்கள் இவற்றின் மூலம் உங்களுக்கு தெரிந்தவற்றைப் பகிருங்கள். அந்தப்பகிர்வில் அதுவே முடிந்த முடிவு எனவும், எனக்குத் தெரியும் என்ற தொனியும், எனக்குத்தான் தெரியும் என்ற கர்வமும் விட்டொழிந்திருந்தால் உங்கள் தேடல்கள் எந்த மனிதரையும் காயப்படுத்தாது கனிவாக பிறரைச் சேரும்.

இதனைத்தான் ‘‘நான்’’ ‘‘நான்’’ எனக்குத்தான் இவற்றை அறுத்தால் முத்தியின்பம் கிட்டும் என்றார்கள். ஆம். அந்த இன்பம் முத்திபெறும் வரை காத்திருக்கத்தேவை இல்லை. இப்பிறப்பிலேயே அதனை அறுத்தால் இப்பொழுதே இக்கணமே அந்த இன்பத்தைப் பெறலாம். முயற்சிப்போமா?

பறவைகளுக்கோ அல்லது வீட்டு மிருகங்களுக்கோ உணவு கொடுக்கிறோம். அது போதாதோ!!! என்ற நினைப்பில் அவற்றைக் காயப்படுத்தி உணவுகொடுத்தால் எவ்வளவு துன்மானதோ! அது போலவே உங்கள் கருத்தை விருப்பத்தை பிறருக்கு காயப்படுத்தி வழங்குவதும் அமையும். எனக்கு தெரியும் என்று அகமகிழுங்கள் ஆனால் எனக்குத் தான்தெரியும் என்று எவருக்கும் எதனையும் திணிக்காதீர்கள்.

**இக்கட்டுரையில்: எந்தப்பறவைகளையோ, மிருகங்களையோ ஏன் எந்த தனிப்பட்ட மனிதர்களையோ காயப்படுத்தவில்லை என்பதனை அறியத்தருகிறோம்.**







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 288





ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவிக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# ராஜபக்ஷக்கள் அரசியலமைப்பில் செய்யப்போகும் மாற்றம்?


கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி


நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு என்ற அசுர பலத்துடன் ஆட்சி அமைத்திருக்கின்ற ராஜபக்ஷக்களின் பொது ஜன பெரமுன அரசின் நிகழ்ச்சி நிரலில் முதலாவதாக அரசியலமைப்பு மாற்றமே இருக்கப்போகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நிகழ்த்திய தனது சிம்மாசன உரையில் அதனைத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். '19 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பது' என்பதுதான் தமது தேர்தல் வாக்குறுதியாக இருந்ததாகக் குறிப்பிட்ட அவர், அதற்கு மக்களுடைய ஆணை கிடைத்திருப்பதால் அதனைத்தான் தாம் முதலில் செய்யப் போவதாகவும் சொல்லியிருக்கின்றார்.

அரசியலமைப்பை முழுமையாக மாற்றாமல் 19 ஆவது திருத்தத்தை மாற்றியமைப்பதுதான் அரசாங்கத்தின் முதலாவது இலக்காக இருக்கின்றது. இதற்கான செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்ட போதிலும், எவ்வாறான மாற்றத்தை அரசாங்கம் செய்யப்போகின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை. அதனைச் செய்த பின்னர் முழுமையான மாற்றம் ஒன்றையிட்டு அவர்கள் சிந்திக்கலாம் எனத் தெரிகின்றது.

19 ஆவது திருத்தத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என ராஜபக்ஷக்கள் சிந்திப்பதற்குக் காரணம் இருந்தது. ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுப்பதை இலக்காகக் கொண்டே இந்தத் திருத்தத்தை ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்தார். 2015 இல் ஆட்சி அமைத்தவுடன் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தில் இந்த திருத்தம் அவசரமாகக் கொண்டுவரப்பட்டது. தனக்கு சவால்விடக்கூடிய ஒருவராக ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர்தான் இருக்க முடியும் என்பதை சரியாகக் கணித்த ரணில் விக்கிரமசிங்க, அவரது குடும்பத்தில் செல்வாக்கு மிக்க எவருமே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு இந்தத் திருத்தத்தைக்கொண்டுவந்தார்.

'19' இன் மீது ராஜபக்ஷக்களுக்கு இருந்த சீற்றத்துக்கு இவைதான் காரணம். மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக வரும் இலக்குடன் மஹிந்த ராஜபக்ஷ கொண்டுவந்த 18 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்துவிட்டது 19 ஆவது திருத்தம். அதனால்தான் கடந்த தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவினால் போட்டியிட முடியவில்லை. ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தில் கோட்டாபய ராஜபக்ஷவோ, பசில் ராஜபக்ஷவோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு போடப்பட்ட தடையான 'இரட்டைப் பிரஜாவுரிமை' விவகாரத்தை கோட்டாபய கடும் பிரயத்தனத்தின் மத்தியில் தாண்டினார்.

அமெரிக்கப் பிரஜாவுரிமையைத் துறந்து ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்கியது ரணில் எதிர்பார்க்காத ஒரு அதிரடித் திருப்பம். அத்துடன் ரணிலின் கனவும் கலைந்தது. 19 ஆவது திருத்தத்தை ரணில் கொண்டுவந்த நோக்கம் தோல்வியடைந்தது.

19 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் கூறிவந்தாலும், போதிலும், கோட்டாபய ஜனாதிபதியாக வருவதற்கு அந்தத் திருத்தம்தான் உதவியது. 19 வரவில்லையெனில் மஹிந்தான் 2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கி 3 ஆவது தடவையாகவும் ஜனாதிபதியாகியிருப்பார். மஹிந்தவின் தலைமையில் ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு அது வழிவகுத்திருக்கும்.

19 ஆவது திருத்தத்தின் மூலமாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றது. பாராளுமன்றம் பலமடைந்திருக்கின்றது. அதனால்,







பிரதமரின் பலமும் அதிகரித்திருக்கின்றது. இன்று பலம்வாய்ந்த ஒரு பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ இருப்பதற்கும் இந்தத் திருத்தம்தான் காரணம். ஆக, 19 ஐ இல்லாதொழிப்பதன் மூலம் இந்த நிலைமையை மாற்றியமைக்க மஹிந்த விரும்புவாரா?

அரசியலமைப்புத் திருத்தம் செய்யும் குழுவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரண்டு யோசனைகளை முன்வைத்திருக்கின்றார்.அந்த இரண்டும் முக்கியமானது.

27 ஆம் பக்கம் பார்க்க...







# சிக்கனம்

கே.எஸ்.சுதாகர்
அவுஸ்திரேலியா

"வெளியீட்டுவிழா செலவுகளைக் குறைச்சுக் கொள்ள வேணும். சிக்கனம் முக்கியம்'' வளர்மதி பிடிவாதமாக நின்று கொண்டார். ஹோல், சாப்பாட்டுச் செலவுகளில் ஒன்றும் செய்து கொள்ள முடியாது. அழைப்பிதழ் அடிப்பதில் முயன்று பார்க்கலாம் எனக் களம் இறங்கிவிட்டார் அகமுகிலன்.

ஏதோ இங்கிலிசில் அடிக்க தமிழில்வருமாமே! ஒற்றைவிரலால் கீ போர்டை நொருக்கித் தள்ளி கொம்பியூட்டர் திரையில் அழைப்பிதழை அடித்துவிட்டார். அழைப்பிதழ் பகட்டாக இருக்க – புத்தகம், தொட்டெழுதும் பேனா, இறகு என்னும் ஓவியப்பின்னணி கொண்ட பக்கிறவுண்ட் ''ஒன்றைத் தேடி எடுத்துக் கொண்டார். வந்ததே வினை. அழைப்பிதழை பக்கிறவுண்டிற்குள்'' கொண்டு செல்லும்போது எழுத்துக்கள் அங்கும் இங்கும் ஓடின. ஒருவிதமாக ஒரு வசனத்தைச் சரிக்கட்டிக் கொண்டு வந்துவிட்டு, மறு வசனத்தைப் பார்த்தால் அது குதித்துக் கூத்தாடி இருக்கும். அவர் அடித்த சொற்களில் சிலவற்றைக் காணவும் இல்லை. போராடிக் களைத்து, அப்படியே போட்டுவிட்டு உறக்கத்திற்குப் போய்விட்டார்.

உறக்கம் வரவில்லை. மூன்று தடவைகள் விழித்து எழுந்து கொம்பியூட்டருக்கு முன்னால் போய் இருந்தார். தமிழில் ஒரு சொல்லுக்கு பல அர்த்தங்கள் இருப்பதைப் புரிந்துகொண்டு, அழைப்பிதழில் சொற் சிலம்பாட்டம் விளையாடினார். மாலை என்பதைப் 'பிற்பகல்' என்று மாற்றினார். பின்னர்



'ஹபிற்பகல்' என்பதை 'பி.ப' என மாற்றினார். இப்படிச் சதுரங்கம் விளையாடி, விடிய ஐந்து மணிக்குள் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விட்டு உறக்கத்திற்குப் போனார்.

காலை பத்து மணியளவில் எழுந்தார் அகமுகிலன். அழைப்பிதழை ஒரு 'ஹயு எஸ் பி'யில் சேமிக்க முயன்றார், இருட்டுக்கு பயந்து சொல்வழி கேட்ட அழைப்பிதழ், பகலானதும் தன்னுடைய விளையாட்டைக் காட்டிவிட்டது. கொம்பியூட்டர் திரையில் இடது புறமாக அழைப்பிதழ் அரைக் கட்டை தூரத்திற்கு ஓடியிருந்தது. இரவு காணாமல் போயிருந்த சொற்கள் எல்லாம் அங்கே கூடிக் கும்மாளமிட்டிருந்தன. அப்படியே எல்லாவற்றையும் சேர்த்துக்கட்டி, சேமித்துக் கொண்டு அச்சிடுவதற்காகச் சென்றார்.

''தம்பி அழைப்பிதழ் கொஞ்சம் அங்கை இங்கை ஓடிக் கிடக்கு. அதைக் கொஞ்சம் சரிக்கட்டிப் போட்டு பிறின்ற் பண்ணும்.''

''ஐயா நேரம் தான் பிரச்சினை. நேரத்துக்கு காசு தருவியள் எண்டா சொல்லுங்கோ ''

''தரலாம்...'' என்றார் அகமுகிலன்.

''யு எஸ் பி'' யைத் தனது கொம்பியூட்டரில் சொருகியவர் அகமுகிலனை மேலும் கீழும் பார்த்தார். கொம்பியூட்டர் திரையை அகமுகிலனின் பக்கம் திருப்பினார். திரையில் சமஸ்கிருதத்தில் அவருடைய அழைப்பிதழ் இருந்ததைக் கண்டார்.

''இதுக்குத்தான் ஐயா, நாங்கள் பிடிஎவ் இலை தாருங்கோ எண்டு கேக்கிறனாங்கள். சரி. இதுவும் நல்லதுக்குத்தான். திருத்த வசதியா இருக்கும்.''

உங்களுக்கு பிளக் அண்ட் வைற்றிலை வேணுமா? கலரிலை வேணுமா? கலர் எண்டா, பிளக் அண்ட் வைற்றைவிட ஐஞ்சு மடங்கு விலை.

அகமுகிலன் யோசித்தார். ''தம்பி உமக்கு பதில் சொல்லலாம். மனிசிக்குமல்லே சொல்ல வேணும். பத்து அழைப்பிதழ்களைக் கலரிலும் மிச்சம் தொண்ணூறை கறுப்பு வெள்ளையிலையும் அடிச்சுத் தாரும். இரண்டுக்கும் பிறிம்பு பிறிம்பா ரிசீற் தாரும்.''

வளர்மதி கேட்டால் ஒரு பற்றுச்சீட்டைக் காட்டலாம் என்பது அவர் எண்ணம். வெளியே வந்ததும் கலரில் அடிச்சதற்கான பற்றுச்சீட்டைக் கிழித்தெறிந்தார்.

களைத்துப் போய் வீடு வந்து சேர்ந்தார் அகமுகிலன். வந்ததும் அழைப்பிதழை மனைவிக்குக் காட்டினார்.

''நீங்கள் அழைப்பிதழ் அடிக்கிறதிலையும் கெட்டிக்காரர் தான்'' மெச்சினார் வளர்மதி.

''பெரிய பெரிய ஆக்கள் எல்லாம் வாற விழாவுக்கு நானும் வரவேணும்'' எண்டால் – எனக்கொருபுதுசாறிவாங்கித்தரவேணும் பிடிவாதமாக நின்றுகொண்டார் வளர்மதி. அகமுகிலனுக்கு வளர்மதி இப்போது தேய்மதியாகத் தெரிந்தார்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

## அமெரிக்க துணை ஜனாதிபதி தேர்தலில் கமலா ஹறிஸின் தலைமை ஆலோசகராக

# யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட ரோஹினி





அமெரிக்க துணை ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரான கமலா ஹறிஸின் தலைமை ஆலோசகராக ஈழத்தில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட ரோஹினி கொசோக்லு என்பவரே செயற்படுகிறார்.

கடந்த 2018ஆம் ஆண்டில், ஹறிஸின் தலைமைப் பணியாளராகப் ரோஹினி கொசோக்லு பொறுப்பேற்றார். இதன்போது அமெரிக்க செனட்டர் ஒருவருக்கு தலைமைப் பணியாளர் பதவியை வகித்த ஒரே அமெரிக்க ஆசியப் பெண் என்ற பெருமையையையும் அவர் பெற்றார்.

ரோஹினி கொசோக்லு, ரோஹினி மிச்சிகன் பல்கலைக்கழகம் மற்றும் ஜோர்ஜ் வொஷிங்டன் பல்கலைக் கழகத்தின் பட்டதாரி ஆவார். மிச்சிகன் செனட்டர் டெபி ஸ்டெபெனோ சார்பில் பணியாற்றும்போது கடிதத் தொடர்பு மேலாளராக அரசியலில் நுழைந்தார்.

பட்டம் பெற்ற பின்னர் ஸ்டடெபெனோவின் மூத்த கொள்கை ஆலோசகராக பணியாற்றினார். பின்னர் அவர் கொலராடோ செனட்டர் மைக்கேல் பென்னட்டின் கீழ் ஒரு மூத்த சுகாதார ஆலோசகராக பணியாற்றினார். அந்த நேரத்தில் ஒபாமா கெயார் திட்டத்திலும் பணியாற்றினார்.

ஏழு ஆண்டுகள் பென்னட்டின் அலுவலகத்தில் பணியாற்றிய ரோஹினி, அப்போது செனட்டர் கமலா ஹறிஸின் துணைத் தலைவராக பதவி உயர்வு பெற்று தற்போது மூத்த ஆலோசகராக உயர்ந்துள்ளார்.

ரோகினி கொசோக்லுவின் பெற்றோர் வைத்தியர் விஜயதேவேந்திர ரவீந்திரன் மற்றும் ஷோபனா ரவீந்திரன் ஆகியோர் 1980களின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தவர்களாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்த நவம்பரில் ஜோ பிடைன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால், துணை ஜனாதிபதியாக ஆசிய அமெரிக்கவம்சாவளியைச் சேர்ந்த முதல் கறுப்பின பெண்ணான கமலா ஹறிஸ் தேர்ந்தெடுக்கப்படுவார்.




இதேவேளை, அமெரிக்க அலுவலக பிரதானி பதவியில் நியமிக்கப்பட்ட முதல் ஆசிய, அமெரிக்கப் பெண் ரோஹினி கொசோக்லு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் அதி உயர் விருதான [2019 GW Alumni Achievers] ஆண்டு அரசியல் மற்றும் விளையாட்டுத் துறைக்காகப் பெற்றவர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் துணை ஜனாதிபதி வேட்பாளராக கலிபோர்னியா செனட்சபை உறுப்பினர் கமலா ஹறிஸ் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப் பொதிகளில் கொரோனாத் தொற்று?



இன்று ஆதாரம் அற்ற செய்திகள் வதந்திகள் இவை மிக மிக வேகமாகத் தொற்றுகின்றன.

உணவுப் பொருட்களைப் பொதி செய்யும் போது அவற்றின் மூலம் கொரோனாத் தொற்றுப் பரவும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் அண்மைக்காலமாக மக்களிடத்தில் நிலவிவந்தது.

குறிப்பாக சீனாவின் இரு நகரங்களில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவுப் பொதிகளில் அண்மையில் கொரோனா தொற்று இருந்ததாகப் புகார் எழுந்ததோடு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் நோய்த் தொற்று பரவல் அதிகமாகலாம் என்ற அச்சமும் மக்களிடத்தில் நிலவியது.

இந்நிலையில் ஜெனிவாவில் உரை நிகழ்த்திய உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூத்த அதிகாரி மைக் ராயன் உணவுப் பொருட்கள் குறித்த அச்சம் தேவையற்றது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் உணவுப் பொதிகளில் கொரோனா ஊடுருவல் இருப்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை என்றும் மக்கள் அச்சமின்றி இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை வாங்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.




®
Herbul
HENNA
Hair Colour
BROWN HENNA
BLACK HENNA
BURGUNDY HENNA
Brown Henna
Black Henna
Natural Cultivated Henna
ISO 9001
உங்களுக்கு தெரியுமா? Herbul Black Henna வின்
சர்வதேச புகழை பயன்படுத்தி போலிகள் சந்தையில் வந்துள்ளன.
Original Herbul Henna Box இல் Beauty Complex Europe Ltd
முத்திரையும் முகவரியும் உள்ளதா என கவனித்து வாங்கவும்
Herbul Black Henna
ஐரோப்பா தர சான்றிதழுடன் எந்த வித பக்க
விளைவுகளும் இல்லாமல் தயாரிக்கப்பட்டது
EU
EU Registered - 2800597
EXPORT QUALITY
Herbul Black Henna வின் முக்கியமான
மூலப்பொருள் இயற்கையான மருதோன்றி பவுடர். இதனால்
ஹெர்புல் ஹென்னாவை உபயோகப்படுத்தும்
போதெல்லாம் உங்கள் கூந்தலுக்கு நல்ல நிறத்தையும்,
ஆரோக்கியத்தையும், பளபளப்பையும் கொடுக்கிறது.
Herbul
Black Henna's
New box coming soon
புதிய பெட்டி கூடிய விரைவில்
வர உள்ளது
IMPORTED & MARKETED BY
Beauty Complex Europe Ltd
Unit 8, Chandani Bazar, 29 / 33, Ealing Road,
Wembley, Middlesex HA0 4YA, london (UK)
CONTACT US
00 44 ( 0 ) 208 902 94 79
00 44 ( 0 ) 74 95 460 110
Email : beautycomplex@hotmail.co.uk | Web : www.beautycomplex.co.uk
SARL SUBASH EUROPEAN
Marketing Executive (France)
Passez vos commandes aux
065 28 27 303 | 066 96 67 571
KAMAL 078 748 16 89
Marketing Executive
T.M.T Asian Shop. Import. Bunzstrasse,4
5610 Wohlen AG Switzerland (Swiss)
STAR IMPEX (Marketing Executive)
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE-44147 Dortmund
Tel : 0231/8602696 | Fax:0231/8602698

# அமெரிக்கத் துணை ஜனாதிபதி எங்கட கமலா அக்காவோ?

ஜூட் பிரகாஷ் - Jude Prakash
மெல்பேர்ண்



உங்களுக்கு தமிழ் தெரியுமா தெரியாதா என்று எனக்கு தெரியாது. நீங்க பச்சைத் தமிழச்சியா இல்லையா என்று கூட எனக்கு கொஞ்சமும் தெரியாது.

ஆனாலும் உங்கட பெயர் தமிழ் பெயரைப் போல இருப்பதால், நீங்க தமிழ் என்று நினைத்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

**நாங்க சின்னனில் இந்திரா காந்தி கூட தமிழ் என்று யோசிச்சாக்கள் தானே!**



ஏனென்றா அக்கா, நாங்க சின்னனில் இந்திரா காந்தி கூட தமிழ் என்று யோசிச்சாக்கள் தானே.

நேற்று அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் **Joe Bidend** துணை ஜனாதிபதி வேட்பாளராக நீங்கள் அறிவிக்கப்பட்டதும், ஏனோ எங்களுக்கு எங்கிருந்தோ வந்த ஒரு ஆனந்தம் புகுந்து கொண்டதுக்கு உங்கட கமலா என்ற அழகிய தமிழ் பெயர் தான் காரணம். இன்னும் கொஞ்ச நாட்களில், கமலா ஒரு சிங்களப் பெயர், நீங்கள் சிங்களம் என்று ஞானசார தேரர் எங்களோட சண்டைக்கு வருவார்.

கதிர்காம கந்தனை சிங்களவனாக மாற்றியது போல, கன்னியாவையும் இராவணனையும் தங்கட என்று தம்பட்டம் அடிக்கும் பௌத்த சிங்கள பேரினவாதம், கமலாக்காவையும் வெள்ளை வானில் தூக்கி தங்கட ஆள் என்று கொண்டாடத் தான் போகுது. உங்கட அம்மாவும் தமிழ், அவ பெயர் ஷியாமளா கோபாலன் உங்கட பெயரும் தமிழ், கமலா நாங்களும் தமிழ் என்றபடியால் மட்டுமே நீங்க எங்கள கவனிப்பியலோ தெரியாதக்கா.

ஆனால், உலகமே வியக்கும் வண்ணம் கட்டுக்கோப்பான ஒரு ஆயுதப் போராட்டத்தை நடாத்தி, ஒரு இருபது வருடங்களிற்கு முன்னம் வெற்றியின் விளிம்பில் நின்ற எங்களின் இன்றையை கையறு நிலையை கவனிப்பார் யாருமில்லை அக்கா.

பேசித் தீர்க்கலாம் வாங்கோடா என்று ஊரூராக கூட்டிப் போன நோர்வேக்காரனின் சிலமனையும் காணோம், அவங்களோடு கூட்டுக் களவாணிகளாக சேர்ந்த உங்கட அமேரிக்காவும், யப்பானும், ஐரோப்பிய ஒன்றியமும் நாங்கள் யுத்தத்தில் தோற்றதோடு எங்களை கைவிட்டு





விட்டது உங்களிற்கு தெரிஞ்சிருக்கும்.

கமாலாக்கா, உங்களுக்கு எங்கட உண்மையான பிரச்சினை என்னென்று தெரியுமோ தெரியாது, தெரிய முயற்சிக்க போறியலோவும் தெரியாது.

**உண்மையானப் பிரச்சினை என்னென்று எங்களுக்கே சரியா தெரியாமல் போய்ட்டுது**

உதுக்க ஆகப் பெரிய பகிடி என்னென்றால், எங்கட உண்மையானப் பிரச்சினை என்னென்று எங்களுக்கே சரியா தெரியாமல் போய்ட்டு, உண்மையை சொல்லப் போனால்




தெரியாமல் ஆக்கிட்டாங்கள்.

எங்களுக்கே எங்கட பிரச்சினை என்னென்று தெரியாமல் இருக்கேக்க, உங்களுக்கு எங்கட உண்மையான பிரச்சினையை என்னென்று நாங்கள் உங்களுக்கு விளங்கப்படுத்த போறம்?

எங்கட ஊர் பெடியளிற்கே எங்களால எங்கட பிரச்சினையை சரியா விளங்கப்படுத்த ஏலாமல் இருக்கிற சீத்துவத்தில, வொஷிங்டனில் இருக்கிற உங்களுக்கு எப்படி அக்கா விளங்க வைக்கிறது?

ஒருத்தனை கேட்டால் எங்களுக்கு தனி நாடு கிடைச்சால் எல்லாம் சரியாகிடும் என்றுறான். இன்னொருத்தனோ இல்லையடாப்பா தனித் தேசம் தான் வேணும் என்றுறான்.

சரியடாப்பா, தனி நாட்டுக்கும் தனித் தேசத்துக்கும் என்னடாப்பா வித்தியாசம் என்று கேட்கப் போனால், இருத்தி வைச்சு மண்டை காயப் பண்ணுறாங்கள்.

ஆள விடுங்கோடாப்பா என்று அவங்கட இருந்து கழற, இஞ்ச வாரும் ஐசே, நாங்க சமஷ்டி எடுத்து தாறம் என்று ஓராள் சீனியில்லாத தேத்தண்ணி வாங்கித் தந்தார். ■

28 ஆம் பக்கம் பார்க்க...


கமலா ஹரிஷின் குடும்பத்தினர்

T.T.S BROTHERS GmbH& Co.KG
TTS Brothers GmbH & Co.KG
*Lebensmittel *Seafood *Textilien *Schmuck
Germany நாட்டில் 25 ஆண்டுகளைக் கடந்த ஒரே நிறுவனம்
நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!
உங்கள் வீட்டுத் தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள் மற்றும்
ஆடை அணிகலன்களுக்கும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
RHEINISCHE STR 52 | 44137 DORTMUND | Tel: 0231 819288
Wolbecker 27 | 48155 Munster | Tel: 0251 13 65 194
Helmholtz Str 11 | 46045 | Oberhausen | Telefon: 0208 20 28 29
Johannes Str 35 | 53225 | Bonn Beuel | Telefon: 0228 4037 7846 | Fr.und sa. 11.00 bis 19.00 Uhr

# குறி



### புதிர் யார் தலைவன்!

குருவிகளுக்குள் குழப்பம்
தம்மில் யார் தலைவன் என்று
மஞ்சள் குருவி சொன்னது
சிவப்புக் குருவி என்று
எல்லாக் குருவிகளும்
ஆமோதித்தன சரி
இப்போது யார் தலைவன்!

### கண்ணாடி

திரும்ப திரும்ப பார்த்தேன்
பிழை பிழையாய்
யோசித்தேன் புரிந்தது
இப்போது நான் என்னை
திருத்திக் கொள்கிறேன்
ஒவ்வொரு மனிதர்களிலும்
என் முகம் பார்த்து!

### நித்திரை

அவன் பரீட்சைக்கு
படித்துக் கொண்டிருந்தான்
வந்து தொலைத்தது
நித்திரை
பாவம் பாட்டி
மருந்தும் போட்டுப் பார்த்தா
இன்னும் வரவில்லை
கடவுள் ஏனோ
மாற்றி விளையாடுகிறார்!

### முகமூடி

நாம் ஒவ்வொருவரும்
அணிந்து கொண்டுதான்
பயணிக்கின்றோம்
ஆனால் என்ன
சிலர் தமக்குப் பிடித்த நிறத்தில்
வேறு சிலர் மற்றவர்களுக்கு
பிடித்த நிறத்தில்
வெகு சிலரே அதை அகற்ற
முயல்கிறார்கள்!

### மறதி

பரீட்சை முடிந்து வந்த
அவன் புலம்பினான்
நேற்றுத்தான் படித்தேன்
இருந்தும் சீ என்றான்
பின்பு
எதிரே வந்தவனை பார்த்து
ஐந்து வருடங்களின் முன்பு
என்னைத் திட்டிய பாதகன்
இவன்தான் சீ என்றான்
இதில் வேண்டியது என்னமோ
ஒரு சின்ன மாற்றம்!

### பயம்

பல சமயங்களில்
நான் சொல்ல நினைப்பேன்
சொல்ல முடிவதில்லை
யாரோ ஒருவர் அதையே
சொல்லி வெற்றியை
தட்டிச் செல்வார்
அட சொல்லியிருக்கலாமோ
என்று ஒரு மின்னல்
வெட்டிச் செல்லும்
சில சமயங்களில்...
நல்ல காலம் சொல்லவில்லை
என்று ஒரு பேரிடி
இடித்தும் செல்லும்
இடிக்குப் பயந்து
மின்னலை தவறவிட்ட
தருணங்கள் பல!

**தமிழினி பாலசுந்தரி - நியூஸ்லாந்து**

# தெளிவும் தெரிவும்



### சுயமரியாதை

தன்னம்பிக்கைக்கும் நம்பிக்கைக்கும்
மிக முக்கியமாக
தேவைப்படுவது சுயமரியாதை.
சுய புரிதல் என்பது நீங்கள்
உங்களை எப்படி
நினைக்கிறீர்கள். அல்லது
உங்களை மற்றவர்களுக்கு எப்படி
காட்டிக் கொள்ள விரும்புகிறீர்கள்.

உங்கள் அடையாளத்தை
நீங்கள் நிலை நிறுத்த வேண்டும்
என்றால் உங்களை நீங்கள்
சரியாக அளவிடவேண்டும்.

உதாரணத்துக்கு ஏதோ ஒன்று
உங்களுக்கு தேவைப்படும்
ஆனால் அதை அடைய முடியாது
என்று நீங்கள் பின்வாங்குவீர்கள்.

உங்களுக்கு பிடித்த விருப்பமானதையே
நீங்கள் இழந்து விடுகிறீர்கள் என்றால்...

இதற்கு காரணம் உங்களை நீங்கள்
தவறாக மதிப்பிடுகிறீர்கள்.

உங்களுக்கு உங்கள் மேல் சுய மரியாதை
இல்லாமல் நீங்கள் ஒதுங்கிப்
போனால் உங்கள் கவனம்
திரும்பும் இலக்கு திசை மாறும்.

இந்த தோல்விக்கு முழு காரணமும்
பொறுப்பும் நீங்கள்
உங்களை தரக்குறைவாக
கணக்கிட்டுவைத்திருந்ததுதான்.

மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்
என்று நினைக்காமல்
நீங்கள் உங்களை மாற்றுங்கள்.

உங்கள் மாற்றம் மற்றவர்களையும்
மாற்றும்...!

### ஏமாற்று ஆனால் இவர்களை அல்ல!

உனது அன்புக்காக எவர் ஏங்குகிறாரோ ..?
உன்னைப் பார்ப்பதற்காக
எவர் காத்திருக்கிறாரோ ..?
உனது வார்த்தைகளை
எவர் நம்புகிறாரோ ..?
உனது புன்னகையை
எவர் எதிர்பார்க்கிறாரோ ..?
உன்னை எப்போதுமே யார்
நேசிக்கிறாரோ ..?
உனது நினைவுகளை
யார் பாதுகாக்கிறாரோ ..?
உனது பிரிவை யார் தாங்க மாட்டாரோ...?
நீ இல்லாமல் யார் வாழ மாட்டாரோ...?
இவர்களை ஒருபோதும்
நீ ஏமாற்றி விடாதே..!
ஏனென்றால் இவர்களை
இந்த நிலைக்கு
மாற்றி விட்டதே நீ தான் !

**நெடுந்தீவு முகிலன்- யேர்மனி**






# இனிப்பில் இருந்து இனி விடுபடுவது எப்படி!

**ஐஸ்கிறீம் இனிப்பு போன்ற உணவுகளுக்கு அடிமை யாகிவிட்டால். விடுபடுவது எப்படி?**

சொக்லேட், ஐஸ்கிறீம் இனிப்பு போன்ற உணவுகளில் ஆர்வம் அதிகமாக இருக்கின்றது. கிட்டத்தட்ட இவற்றுக்கு அடிமையாகிவிட்டேன் என்று கூட சொல்லலாம். இதிலிருந்து எப்படி விடுபடுவது இனிப்பு உணவுகளிலிருந்து விடுபடுவது எப்படி என்று சொல்வதற்கு முன்னர் அதற்கு அடிமையாகிவிட்டேன் என்று நீங்கள் சொல்வதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்பது பற்றி சில வார்த்தைகள் சொல்லியே ஆக வேண்டும்.

இனிப்புக்கு அடிமையாவது என்பது வெறும் பேச்சுச் சொல்ல அல்ல. அது ஒரு நோய் போல பலரையும் பீடித்துள்ளது. ஏனெனில் நாம் இனிப்பை உட்கொள்ளும் போது எமது குருதியில் அபின் சார்ந்ததும் டோபமின் போன்றதுமான இரசாயனங்கள் கலக்கின்றன என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

குருதியில் அதிகளவு டோபமின் சேரும்போது எம்மையறியது ஒரு இன்ப உணர்வு ஏற்படுகிறது. அந்த உணர்வை தொடர வேண்டுமாயின் உடலானது இனிப்பை மேலும் உட்கொள்ளத் தூண்டுகிறது. நாட்செல்லச் செல்ல அதே அளவு இன்பத்தைப் பெற கூடியளவிலான இனிப்பை உட்கொள்ள நேர்கிறது. மது மற்றும் போதைப் பொருள்களும் அவ்வாறுதான் அடிமையாக்குகின்றன.

இனிப்பானது கொகேயினை விட அதிகமாக ஒருவரை அடிமைப்படுத்த வல்லது என Cassie Bjork என்ற ஆய்வாளர் கூறுகிறார். அத்துடன் அதிக இனிப்பை உட்கொள்வதால் எடை ஏறுகிறது. இதன் தொடர்ச்சியாக பிரஸர், கொலஸ்டரோல், நீரிழிவு, இருதய நோய்கள் போன்றவை வரும். எனவே நீங்கள் விரும்பியவாறு அதிக இனிப்பிலிருந்து விடுபட வேண்டியது அவசியம்தான்.





இனிப்பு என்பது சீனி சர்க்கரை ஆகியவற்றிலும் அவை சேர்க்கப்பட்ட உணவுகளிலும் மட்டும்தான் இருக்கிறது என்றில்லை. பழங்களிலும் இருக்கிறது. பழங்களில் உள்ள இனிப்பு தனியாக வருவதில்லை. பழங்களிலுள்ள இனிப்பானது நார்ப்பொருள் மற்றும் ஏனைய போசணைப் பொருட்களுடன் கலந்து வருகிறது. இதனால் அவற்றில் சீனியின் அடர்த்தி குறைவு. எனவே அவற்றை உண்ணும் போது குருதியில் சீனியின் அளவு திடீரென ஏறுவதில்லை என்பதையும் குறிப்பிடலாம். எனவே அவற்றில் அடிமையாகும் நிலை ஏற்படுவதில்லை.

## இதிலிருந்து விடுபடுவது எப்படி?

முதல் வேலையாக உங்களது வீட்டிலிருந்து சீனியையும் சீனி சார்ந்த பொருட்களை வீசிவிடுங்கள். அலுமாரிகளிலிருந்து அகற்றுவதுடன் உங்கள் முயற்சி நின்றுவிடக் கூடாது. அவற்றை உண்பதில்லை என திடசங்கற்பம் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நேர உணவையும் சரியான நேரத்தில் போதியளவாகவும் போசாக்கு நிறைந்ததாகவும் உட்கொள்ள வேண்டும். காலை உணவிலிருந்து இதை ஆரம்பிப்பது முக்கியம். இப்பொழுது பலர் வேலை அவசரத்தில் காலை உணவை தவிர்த்துவிட்டு பின்னர் பசி எடுக்கும் போது திடீர் உணவுகளை கடையில் வாங்கித் திணிக்கும் போதே இந்த பிரச்சனை ஆரம்பிக்கிறது. எனவே மாப்பொருள் புரதம் கொழுப்பு போன்ற போசணைகள் சரியான அளவில் உள்ள உணவுகளைத் தேர்ந்தெடுங்கள். ஏதாவது காய்கறி பழவகைகள் சேர்ந்திருப்பது அவசியம்.

போதிய நீர் அருந்துங்கள். தினமும் 6 கிளாஸ் நீர் அருந்துவது நல்லது. அவை இனிப்பூட்டப்பட்ட பானங்களாக இருக்கக் கூடாது.

பசி இருப்பது கூடாது. பசி இருந்தால் இனிப்பு சேர்ந்த உணவுகளுக்கான அவா அதிகரிக்கும். எனவே பிரதான உணவுகளுக்கு இடைப்பட்ட வேளைகளில் சிறு உணவுகள் உட்கொள்ளலாம். ஆனால் கேக் பிஸ்கற், ரோல்ஸ், பற்றிஸ், உருளைக்கிழங்கு சிப்ஸ் போன்றவற்றை தொடவும் கூடாது. பழங்களாகவோ காய்கறிகள் அதிகம் சேர்ந்தவையாகவும் இருப்பது நல்லது.

மாறாக வறுத்த கடலை, கச்சான் எண்ணெய் சேர்க்காத கரட் வறுவல் போன்ற ஏதாவது ஒரு இனிப்பற்ற போசாக்கு சிற்றுணவை தயாராக வைத்திருங்கள். வீட்டில் இருக்கும் போது மட்டுமல்ல வேலைக்கு போகும் போதோ, வெளியே செல்லும் போதோ பசி எடுக்கும்போது இவற்றை உண்ணுங்கள். கடை நொறுக்குத் தீனிகளை சாப்பிடவே வேண்டாம்.

தினசரி ஏதாவது உடல் உழைப்பில் ஈடுபடுங்கள் அல்லது உடற் பயிற்சி செய்யுங்கள். இது உங்கள் குருதியில் சீனியின் அளவை அதிகரிக்க விடாமல் தடுப்பதால் இனிப்பு மீதான நாட்டத்தையும் குறைக்கும்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

28 ஆம் பக்கம் பார்க்க...






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# கோபம்– இது ஆணுக்கு மட்டும் சொந்தமானதா?

ஸ்ரீரஞ்சனி– கனடா

ஆம்பிளை என்றால் கோபம் வரத்தான் வேண்டும். கோபம் வராவிட்டால் அவன் ஆம்பிளை இல்லை. பொம்பிளை என்றால் எதற்கும் பொறுத்துத்தான் போகவேண்டும் இப்படிப் பல ஏட்டில் எழுதப்படாத, கல்லில் பொறிக்கப்படாத, ஆனால் பழகிப்போன பல வாசகங்களை நாம் இன்னும் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். இவை நம் கலாச்சாரத்துக்கு மட்டும் அல்ல. பல கலாச்சாரங்களுக்குச் சொந்தமானவையாகத்தான் இன்றும் இருக்கின்றன.

கடந்து போன மனித வரலாற்றினைப் பார்த்தோமானால், அனைத்து சமூகங்களிலும் அது வீடாக இருந்தால் என்ன அல்லது வேலைத்தலமாக இருந்தால் என்ன, ஒரு காலத்தில் ஆண்தான் அதிகாரத்தின் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டு இருந்திருக்கின்றான். இதனால் பெண்கள் தமது நியாயப்படுத்தப்படக்கூடிய கோபத்தைக் கூட தகுந்த வழியில் வெளிப்படுத்த முடியாமல் ஆண் மையப்படுத்தப்பட்ட சமூக அமைப்பிற்கு பழக்கப்பட்டிருந்தார்கள்.

இன்று நிலைமை மாறி பெண்ணும் ஆணுக்கு சமமாக அறிவைப் பெற்று தொழில் செய்தபோதும், பழைய பண்பாட்டுக் கோலங்கள் அவளை மீண்டும் தன் வட்டத்துக்குள் பலவந்தமாக இழுக்க முயற்சிக்கின்றன. இதுவே பெருமளவில் முரண்பாடுகள் உருவாவதற்குக் காரணமாகின்றது. ஏதோ ஒரு வகையில் பெண் ஆணில் தங்கி வாழும் நிலையிருந்தால் அவளுக்கு அதனுடன் இழுபட வேண்டிய கட்டாயம் இருக்கும். அப்படி இல்லாதபோது வாழ்க்கை போராட்டமாகின்றது.



அண்மையில் ஒரு தமிழ் வானொலிக் கலந்துரையாடலின் போது கேட்ட கோபம் வராவிட்டால் ஆம்பிளை இல்லை என்ற அசட்டுக் கருத்துப் பற்றி ஓர் இலக்கியச் சந்திப்பில் நான் குறிப்பிட்ட போது, நமது தமிழ் இலக்கியம் பெண்களின் கோபம் பற்றி அல்லவா அதிகமாகக் கதைக்கிறது. கண்ணகிக்கு பாஞ்சாலிக்கு – வந்த கோபம் பற்றி எனச் சில ஆண்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவ்வகையில் நோக்கினால், நமது முன்னோர்கள் பெண்களின் கோபத்தை ஏற்றிருக்கிறார்கள். அன்று பெண்ணுக்கு கோபம் வரக்கூடாது என எங்கும் சொல்லி வைக்கவில்லை. காலப் போக்கில் கோபம் ஆண்களின் குண இயல்பாக எப்படியோ திரிபடைந்து விட்டது. பெரும்பாலான ஆண்கள் கோபத்தை தமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக நினைக்கிறார்கள். சில பெண்கள் அதற்கு ஒத்து ஊதுகிறார்கள்.

கோபம் கொண்ட மனிதன் தன் கோபத்தின் அளவைப் பல வேறுபட்ட பரிமாணங்களில் வெளிப்படுத்துகின்றான். அது பெரும்பாலும் அமைதியான புறக்கணிப்பாகவோ அல்லது விலங்குகள் போல பலத்த சத்தம் எழுப்பி, பல்லை நெருமி, உறுமலைக் காட்டும் பயமுறுத்தலாகவோ அல்லது பலாத்காரத்தின வெளிப்பாடான உடைத்தல், அடித்தல், துன்புறுத்தலாகவோ இருக்கிறது. கோபம் பழிவாங்கும் கட்டத்துக்குப் போனால் பலாத்காரத்தின் உச்சமான கொலையாக முடிகிறது. இவை யாவும் ஏற்றுக்கொள்ள முடியாத வெளிப்பாடுகள் ஆகும்.

பொதுவாகப் பெண்கள் மனதுக்குள் கோபத்தை வைத்துக் குமைவதையும், பெரும்பாலான ஆண்கள் அதனை வன்முறையான நடத்தையால் வெளிக்காட்டுவதையும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

கோபம் வருவது மனித இயல்பு. ஆனால் அண்மையில் தமிழ் வானொலி ஒன்றில் ஒலிபரப்பான ஒரு தமிழ் நாடகத்தில் வந்தது போல ஆம்பிளை என்றால் அப்படித்தான் என்று வன்முறையைப் பொறுத்துக் கொண்டு, அடி வாங்கிய பின்பும் அவனுடன் உடலுறவில் ஈடுபடுவதும், நீ அப்படிச் செய்ததால் தானே உன்னை அடித்தேன் என அவன் குற்றம் சாட்ட, அதையும் பெண் நம்புவதும் மிகவும் வேதனைக்குரிய விடயங்கள். தமது நடத்தைக்கு எந்தவிதப் பொறுப்பும் ஏற்காமல, அது பெண்ணின் பிழையின் பிரதிபலிப்பே என ஆண்கள் சொல்லும் விளக்கங்களைச் சில பெண்கள் நம்பி விடுகிறார்கள். அந்த நம்பிக்கையின் பாதிப்பால் சிலவேளைகளில் அவர்கள் மனத் தகைப்புக்குக்கும் ஆளாகின்றனர். அல்லது தமது கோபத்தை அடக்கி அடக்கி தம் மனத்துக்குள் மூட்டை கட்டியதன் பயனாக மனநோயாளியாகின்றனர். இன்னும் சிலர் தமது ஆற்றாமையைத் தமது பிள்ளைகளின் மேல் காட்டி



பிள்ளைகளின் மனதைப் பாழடிக்கின்றனர். அதனால் பிள்ளைகளின் நடத்தைச் சீர்கேடுகளுக்கு காரணமாகின்றனர். அல்லது பிள்ளைகளை வீணாக நோகடித்த குற்றவுணர்வில் தம்மைத் தாமே தண்டித்துக் கொள்கிறனர்.

கோபத்தால் வரும் மன வலி சம்பந்தப்பட்ட அனைவரையும் பாதிக்கும். உடல் சித்திரவதையோ உறவை விட்டுத் தூர ஓட வைக்கும். இப்படியான

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

கரிணி

# வேயிலிலுக்குள் சென்றால் கறுத்து விடுவோம் என ஓடி ஒளிகிறோம்!



## வெயிலோடு உறவாடி விளையாடி மகிழ்வோம்

கோடையை தவற விட்டவர் கோல் ஊன்றியே தீருவர் என்பார்கள். மனிதன் வலுவிழுந்து போகையிலே கோலூன்ற வேண்டியுள்ளது. ஆம் மனிதன் மட்டுமல்ல அத்தனை உயிர் தோற்றத்திற்கும் ஆதார சக்தியாக சூரியனே விளங்குகிறது. பஞ்ச பூதங்களை செயற்படுத்துவதும் சூரியனே.

பலதரப்பட்ட இன மக்கள் ஒன்று கூடும் இடத்தில் அவர்களின் இயல்பை உற்று நோக்குகையில் அதிக நகைச்சுவை உணர்வும், எலும்பு மற்றும் உடல் வலுவுடனும் பிறரோடு அதிக சிரிப்பொலியை பரவ விட்டுக் கொண்டிருப்பவர் யார் என உற்றுப் பார்த்தால் அது பெரும்பாலும் கறுப்பினத்தவராக இருப்பார்கள். அதற்காக அவர்களுக்கு கோபம் வராது என்று பொருள் அல்ல. அதிகமாக இந்த மகிழ்வான மனநிலை யாருக்குத்தான் பிடிக்காது? அவ்வாறு மகிழ்ந்திருக்க என்ன வழி?.

ஆம் வழி உண்டு. ஏப்போதும் ஏதோ இழந்த மனநிலையா? உளச்சோர்வா? பலவீனமா? மனச்சிதைவா? பலதரப்பட்ட வியாதிகளா? என்றும் நாடி நலம் பெற வேண்டிய ஒரே இடம் சூரிய ஒளி. ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம் பண்டைக் காலம் தொட்டு கண்டுகொண்ட உண்மை யோகக் கலையில் எத்தனையோ நலந்தரும் பயிற்சிகள் இருப்பினும் சூரிய வணக்கமே முதன்மை பெறுகிறது. பாடசாலைகளில் காலையில் இறைவணக்கம், உடற்பயிற்சி என்பன சூரிய இள வெயிலிலேயே இடம்பெறும். புதிதாக பிறந்த குழந்தையைக்கூட பலம் பெற வேண்டுமென எண்ணெய் பூசி சூரிய இளவெயிலில் படுக்க வைப்பார்கள். உடல் மற்றும் உளம் சார்ந்த செயற்பாடுகளில் சூரிய பங்களிப்பே ஆதாரம் என்று கூற முடியும். உடலின் உள்ள ஹார்மோன்களை செயற்படுத்த மூளைக்கு சூரிய சக்தி தேவைப்படுகிறது. ஹார்மோன்கள் செயற்படாவிடில் உடலியக்கம் நடைபெறாது. இதனால்தான் மரபுவழி ஆயுர்வேத மருத்துவத்தில் உடற்கழிவுகளை அகற்றி உடலை புதிய ஆற்றலுடன் செயற்பட வைக்க சூரியக் குளியலை வலியுறுத்துகின்றனர்.

இன்றைய காலத்தில் விளம்பர நாகரிகம் மேலோங்கி சூரிய ஒளி பற்றிய பயத்தை மக்கள் மத்தியில் பரவவிட்டு மேற்பூச்சு களிம்புகளையும், தலைமுதல் கால்வரை மூடுவதற்கு கவசங்களையும் விற்பனை செய்கின்றனர். ஏறினால் கார் இறங்கினால் அலுவலகம் அல்லது வீடு எனவும் அந்த வீட்டினை கூட சூரிய ஒளி புகாதபடி இருட்டாகவும் பகலிலும் மின்குமிழ்கள், குளிரூட்டிகள் எனவும் உடலின் ஆதார சக்தியோடு விளையாடத் தொடங்கி அதன் வினைகளை பெறத் தொடங்கி விட்டனர். ஆரோக்கிய விடயத்தில் நேரடியான சூரிய ஒளியின் முக்கியத்துவத்தையும், அதனை பெறமுடியாது போகும் நிலையில் ஏற்படும் பெரும் விளைவுகளையும் பார்ப்போம்.

நிழலில் வளரும் தாவரங்கள் எவ்வாறு சோபையிழந்து காணப்படுமோ அதேபோல் சூரிய வெயிலற்ற உடல் நலிவடைந்து மாயும்.

செரட்டோனின் (serotonin) எனப்படும் ஹார்மோன் தான் எமக்கு மகிழ்வைத் தருகின்றது. அது சூரிய ஒளி எந்தளவிற்கு பெற்றுக் கொள்கிறதோ அந்தளவிற்கே மூளையிலிருந்து உற்பத்தியாகிறது. மற்றும் பகல் வெளிச்சத்தில் சக்தி பெற்று கரிய இரவு நேர ஆழ்ந்த தூக்கத்தில் மெலட்டோனின் (melatonin) எனும் ஹார்மோன் சுரக்கிறது. இவை ஆரோக்கியம் மற்றும் மன நிம்மதியில் பெரும் பங்கு வகிப்பவை. இப்போது புரிந்திருக்கும் கறுப்பினத்தவர்களின் சூரிய ஒளி வாழ்வும், மகிழ்வும்.

உடலுக்கு உணவு முக்கியம் இருப்பினும் அந்த உணவை சூரிய ஒளியே உற்பத்தி செய்கிறது. மற்றும் மேலதிகமாக தேவையான வைட்டமின் டி சூரிய ஒளியிலிருந்து இலவசமாக கிடைக்கின்றது. எலும்புகள் பலம் பெறுவதற்கு கல்சியத்தின் செயற்பாட்டிற்கு இந்த சூரிய ஒளியே பிரதானமாக உள்ளது. குறிப்பிட்ட காலங்கள் சூரிய ஒளியிலிருந்து மறைந்து வாழ்ந்தால் எலும்புகள் நெகிழ்வடைந்து நொருங்கி உடையும். வெறுமனே சூரிய ஒளி என்பதை விட அதன் இள வெப்பநிலையோடு கூடிய நேரடி ஒளி உடலில் பட வேண்டும். அப்போதுதான் உடல் நன்கு சக்தியை உள்ளுறிஞ்சும். கடும் மதிய வெயில் தவிர காலை மற்றும் மாலை வெயிலில் உடலில் களிம்புகள் எதுவும் பூசாமல் நேரடியாக ஒளி படுமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். சூரிய ஒளி பற்றாக்குறையால் நுரையீரல், கணையம், சிறுநீரகம், நரம்புமண்டலம், எலும்புத்தொகுதி என உடலின் முக்கிய அவையங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன. தீய செல்கள் உருவாகுவதை சூரிய ஒளி தடுக்கிறது. இதன் பற்றாக்குறை உடலில் ஆபத்தான கட்டிகள், மாரடைப்பு, என்புருக்கி, பூஞ்சைத்தொற்று, தோல்நோய்கள், உடற்பருமன், மூட்டுவலி, கைகால்குடைச்சல், இதயநோய், நீரிழிவு, முடிஉதிர்வு, மனவிரக்தி என நீங்கள் இன்று வீணே மருந்துகள் உட்கொள்ளும் மிக நீண்டு செல்லும் பிரச்சனைகளுக்கு காரணமாக இருக்கின்றது. எனவேதான் சூரிய வெப்பம் குறைந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் வெயில் காலத்தை தவற விடுவதில்லை.

அந்த கோடை காலத்தில் உடலில் சேர்த்துக் கொள்ளப்படும்

27 ஆம் பக்கம் பார்க்க...




# Keys to Unlock Yourself

Bavvatharani R
Nallur



"A man is but the product of his thoughts what he thinks, he becomes."- Mahatma Gandhi. Unlock yourself from the cage of negative thoughts. Watch out for negative thinking. Sometimes we get into negative feedback loops and don't even know it. It brings thoughts of being helpless and hopeless and encroaching to enter your mind as a tornado. During such times we might just need to take a nap or perhaps talk with someone who can help. Remember that feelings aren't facts. Everyone has emotions and they just need to be honoured. They don't have to be justified. It doesn't mean that we are right just because of you have a feeling.

Many people's main problem is suffering due to fear and past memories. People should approach these issues from the basic level. Fear is scary and we can't stop having that feeling. It's important to understand that the aim is not to get rid of fear. Because it's not possible to get the feeling out of your body. This is the intelligent approach to fear. Fear looms large. People fear about losing someone they loved, wealth, health, status. We fear whenever we fail to be responsible or risking things. To overcome from such fears there are simple keys: Firstly, get to know how to face fear. Then one should feel the physical sensations of fear. It's all about the moment that you get fear.

One should be very realistic and practical to support we are on the road to freedom. Freedom doesn't mean feeling no fear. It means working logically with your experience, then the fear no longer controls you. Secondly, once you develop a rhythm of feeling the bodily sensations every time you notice fearful thoughts. The force of fear will simply reduce. It reduces every time you divert your attention away from thinking and into the reactions to the situations which arouse fear and make a deep impact o the nerves and induce emotions and feelings which affect the whole body and the nervous system. Eventually, we become accustomed to such boldly reactions when we come across the same situations or when we are alone.

To get rid of fear and to be free from being locked up with such adverse feelings one can consult doctors.one should take efforts to avoid the situations which induce fear by moving away from the places or situations .Going to temples, chanting mantras and visiting friends and spending time in playing out door games will eradicate fear. One can do yoga to rejuvenate their nervous system. All these and other good hobbies will make you relaxed and ponder about the manner in which fear enthroned you and dominated you and made you weak unhealthy and not fit for anything.



We generally think and simply say to others that the past is past. But in the actual situation we do not let the memory vanish totally from our mind and it isn't really easy to forget about the past. All our past deeds are linked with the resent. When we look with great clarity, we can see that there is no actual thing called the past. Everything that happens in the present holding the past actions, thoughts and experiences. it can't be any other way. Memories of events are thoughts occurring in the present. Anger or hurt about the past is still recurrent in our minds. Our present moment experience's is what keeps the past alive. What is amazing about this understanding is that it shows us that the way out of your suffering is always in the present. We can change our perspective of looking at a situation, we should focus on something different at the present, feel your feelings as they are right now.If a person wants to heal from the past, they should put their attention on the present moment experience. Truly speaking memories are not the problem. Memory is a thought, and a thought has no power or meaning whatsoever, unless you give it power or meaning. You have many thoughts about things that happened long ago, and these thoughts cause no problems. But some thoughts are deeply rooted in mind. You have an emotional reaction to them, and you think them over and over. You may even have beliefs related to them, for example, "I am justified in thinking this" or "I need an apology so I can move on." This keeps them very much alive, affecting your ongoing experience. Healing" means letting go so the thoughts and feelings don't impact you.

Your goal is to neutralize the story from the past. It will help you to lose its power over you. It becomes transparent, and with that, without hard effort and thoughts it will fade and won't affect your life. Many of us are locked into a fear-driven life. We've convinced ourselves that we just can't take the risk to put the fears aside and move forward. Here is the solution for that: we need to take a brilliant approach to face and eradicate fear. It's not enough to say you need to banish fear or overcome them. When it comes to fear, you need to break it down and understand it from the inside out. You need to become familiar with the way it shows up in your experience and develop a lifestyle that keeps you alert and present, so it doesn't sneak up on you.

Blaming others for where your life is won't give anything good to you. It is not going to

Continu/ page28







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# 30 க்கு மேற்பட்ட நடிகர்கள் நடிக்கும் ‘நாளைய நாம்’ தொடர் நாடகம்






**● அவதானி**

ஜேர்மனியில் முதன்முதலாக தயாரிக்கப் பட்டு வரும் ‘நாளைய நாம்’ தொடர் நாடகத்தின் படப்பிடிப்புகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. சாதாரண மனிதர் களையும் அவர்களின் கலை ஆர்வம் கண்டு அவர்களையும் நடிகர்களாக மிளிரச் செய்து வருகின்றது இத்தொடர் நாடகம்.

திரைப்படத்துறையில் அனிமேசன் தொழில் நுட்பப்பிரிவில் டிப்ளோமாப் பட்டப் படிப்பை படித்தவரான திருமதி.சிபோ சிவகுமாரனின் தயாரிப்பிலும் இயக்கத்திலும்,திரு.சிவகுமார் சிவஞானத்தின் ஒளிப்பதிவிலும் ஐ.ரி.என் தொலைக்காட்சியின் ஒத்துழைப்புடனும் இத்தொடர் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

புலம்பெயர் தேசத்தில் வாழும் எமது உறவுக ளின் மேம்போக்கான வாழ்க்கையைப் பார்க்கும் போது, பிரச்சினைகள் எதுவுமற்ற மன அமை தியான, சமூக உறவில் அன்னியோன்னியம் இருப்பதாக தோன்றினாலும் சராசரி மனிதர்கள் சந்திக்கும் அத்தனை உளவியல் நெருக்கடிகளை அவர்களும் நாளாந்தம் சந்தித்துக் கொண் டேதானிருக்கிறார்கள் என்பதை இத்தொடர் வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறது.



ஐரோப்பிய நாடுகளின் பொருளா தார வளமும்,அதுசார்ந்து எமது உறவுகளினால் உள்வாங்கப் பட்ட தமிழருக்கே உரித்தான பணபாட்டு விழுமியங்களுடன் மேலைத்தேய நாகரீகமும் அது சார்ந்த உள்ளக வெளித் தோற்ற ஈர்ப்புக்கும் உட்பட்ட வாழ்வியல் தடங்களை உற்று நோக்கி, பெற் றோர் பிள்ளைகளுக்கு இடையில் ஏற்படும் தலைமுறை முரண்பா டுகள்,உறவுகள் நண்பர்களுக் கிடையில் இருக்கும் இருமுகத் தொடர்புகள்,எது உண்மையான வாழ்வு என்றும் அன்பு பாசம்கூட பொய்யானதோ என நினைக்கத் தோன்றும் வெறுமையான பாலை வன வாழ்க்கையை தேடி ஓடிக் கொண்டிருக்கும் மனிதர்களை இனங் காட்டுகிறது இத்தொடர்.

புலம்பெயர்ந்த இலங்கைத் தமி ழர்கள் தமக்கான படைப்புக்களை தமது நடிகர்களை கொண்டு தாமே படைக்க வேண்டும் என்ற பெரும் கலைத் தாகத்துடன் இத்தொடர் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இத்தொடரில் நடிக்கும் நடிகர் கள் ஒவ்வொருவரும் எங்கு படப்பிடிப்பு நடந்தாலும், ஆகக் குறைந்தது ஒவ்வொருவரும் 100 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து சிரமங்கள் பார்க்காது இத்தொட ரில் அர்ப்பணிப்புடன் பங்குபற்றி இவ்வேலைத் திட்டம் குழுநிலை வேலைத் திட்டம் என்பதை நிரூபித்து வருகின்றனர்.

ஜேர்மனியில் இருக்கும் நடிகர்கள் மட்டுமல்ல பிரான்ஸ், சுவிஸ், இலண்டன் ஆகிய நாடு களிலிருந்தும் பலர் இத்தொடரில் நடித்து வருவதுடன், அந்தந்த நாடுகளிலும் படப்பிடிப்புகள் நடை பெறவுள்ளன.


சிபோ சிவகுமாரன்













இத்தொடருக்கான ரைற்றில் பாடலை எழுதியவர் பிரான்ஸ் வாழ் மூத்த கலைஞர் திரு.தயாநிதி தம்பையா, அவர் தொடர்ந்தும் பாடல் காட்சிகளுக்கான பாடல் களை எழுதுகிறார் பாடலைப் பாடிய வர் தாயக பிரபல பாடகர் திரு.கோகு லன் சாந்தன். ஐரோபபிய நாடுகள் பலவற்றில் அந்தந்த நாடுகளைக் குறிக்கும் பாடல்கள் இடம்பெற்று அந்தந்த நாடுகளிலேயே பாடல் காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட வுள்ளன. பாடலுக்கு இசையமைப்ப வர் தாயக இசையமைப்பாளர் பத்ம ஜன் சிவநந்தன்.

இத்தொடருக்கான கதை வசனத்தை எழுதி வருபவர் கள் இயக்குனர் திருமதி. சிபோ சிவகுமாரன், திரு.ஏலையா க.முருகதாசன், திரு.தயாநிதி தம் பையா உட்பட இன்னும் பல எழுத் தாளர்கள் இத்தொடரில் இணைக் கப்படவிருக்கிறார்கள்.

கலை,இலக்கிய சமூக பொது வாழ்வில் ஈடுபட்டு வரும் பலர் இத்தொடரில் கௌரவ தோற் றத்தில் நடிக்கவிருப்பது குறிப்பி டத் தக்கது. தயாரிப்பு, இயக்கம், படத்தொகுப்பு ஆகியவற்றுடன் அதற்காக கடுமையாக உழைத்து வரும் திருமதி.சிபோ சிவகுமா ரன் ஏறகனவே 40க்கு மேற்பட்ட நாடகங்களையும், ஒரு முழுநீளத் திரைப்படத்தையும் பல குறும்படங் களையும் தயாரித்தவர். யேர்மனி யில் திரைத்துறை ஆவலர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பி டத்தக்கது.







# திருமந்திரமும் வாழ்வியலும் 53

## திருக் கூத்து (திரு நடனம்) –52

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி

சிவன், சிவாயநம என்கின்ற திருவைந்தெழுத்துக்களையே தனது திருமேனியாகக் கொண்டு உயிர்களின் பிறவித்துயர் நீங்குவதற்காகவும், உலக இயக்கம் ஒழுங்குற நடைபெறவும் நடராஜர் ரூபத்தில் ஆடும் நடனங்கள் திருக் கூத்து [திரு நடனம்] எனப் போற்றப்படுகின்றன. தென் இந்தியாவில், [தமிழ் நாடு] ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகியவற்றைக் குறித்து ஆடிய இடங்கள் பஞ்ச சபைகள் [ஐம் பெரும் சபைகள்] எனவும், ஆடிய நடனங்கள் தாண்டவம் எனவும் அழைக்கப்படுகின்றன. மேலும் திரு அதிகை, திருவிற்குடி, திருக்கோவலூர், திருக்கொறுக்கை, திருக்கடவூர், திருப்பறியலூர், வழுவூர், கண்டியூர் ஆகிய எட்டு வீரட்டத்தலங்களிலும் ஆடியவையுடன் அறுசமயக் கூத்து உட்பட பல நடனங்களை இறைவன் ஆடிக் கொண்டிருக்கின்றான்.

1. இறைவன் ஆனந்த தாண்டவம் [வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி] ஆடிய சிதம்பரம் திருமூலட்டநாதர் ஆலய நடராஜர் சன்னிதியே பொற்சபை [பொன்னம்பலம், கனக சபை, பொன் மன்றம்] ஆகும். இத் திருநடனத்தை கண்டுகளித்தவர்கள் பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர் ஆகியோர்.

இந்த நடனம் பற்றி திருமந்திரம் பாடல் 2722

**எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி**
**எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்**
**எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்**
**தங்கும் சிவன்அருள் தன் விளையாட்டதே**

சிவபெருமானுக்குத் திருமேனி, சிவசக்தி. விண்ணும் மண்ணும் என எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது சிவசக்தி சொரூபமே. எனவே காணும் இடமெல்லாம் சிவசக்தி தோற்றம். எங்கும் சிவசக்தி ஆனதால் எல்லா இடமும் சிதம்பரமே. எங்கும் இறைவன் திருநடனமே. இப்படி எங்கும் சிவசொரூபமாக இருப்பதால் எங்கும் எல்லாவற்றிலும் பொருந்தியிருக்கும் சிவபெருமான் தன் அருள் விளையாட்டு [திருநடனம்] படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுமே அத்திருக்கூத்து. சிதம்பரம், இறைவன் ஓயாது நடனமாடிக்கொண்டிருக்கும் இடம் இருதயஸ்தானம் என்றும் கூறுவர்.

மேலும் திருமந்திரம் பாடல் எண் 2743 இல்

**மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்**
**பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்**
**சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை**
**ஆணிப்பொன் கூத்தனை யார் உரைப்பாரே**

மாணிக்க மணி ஒளி போல, ஒளி வடிவாக நடமிடும் நாதனை, வளம் மிக்க பேரம்பலமாகத் திகழும் தில்லைப் பொன்னம்பலத்தே திருநடனம் புரிபவனை, விரிசடைகளாட விளங்கும் வேதாந்தக் கூத்தனை, எட்டத்தே உள்ள வெட்ட வெளி ஆகாசத்தில், விரிசடைகளாட ஆனந்த நடனமிடும் அண்ணலை, உயர்ந்த பொன்போல ஒளி நடம் புரிபவனை யார் அறிவார்?. அவன் பெருமையை யார் அளவிட்டுச் சொல்ல இயலும்?.

மேலும் திருமந்திரம் பாடல் 2723

**சிற் பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்**
**சொற் பதமாம் அந்தச்சுந்தரக் கூத்தனைப்**
**பொற்பதிக் கூத்தனை**
**பொன்தில்லைக் கூத்தனை**
**அற்புதக் கூத்தனை யார் அறிவாரே**

ஞானத்திரு உருவாகவும், சோதி ஒளி வடிவாகவும் உள்ள சிவப்பரம்பொருள், அருள் விளையாட்டாக ஐந்தொழிலும் புரிவதுபோல, உலக இயக்கம் ஒழுங்குற நடைபெற ஐவகைக் கூத்தினையும் நிகழ்த்துகின்றான். அவை சிவானந்தத்தைச் சீவன்களுக்கு அருளும் கூத்து. சொல்லும் பொருளாக உள்ள ஓம் எனும் பிரணவ ஒலியில் விளங்கும் அழகியல் கூத்து. பொற்பதியாகிய சித்தாகாசத்தில் விளங்கும் கூத்து. பொன்னம்பலமான தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடும் அம்பலப் பரவெளிக் கூத்து. ஆருயிர்கள் எல்லாம் கண்டு களித்து இன்புற ஆடும் அற்புதமான ஆனந்த நடனம் என்னும் நடனங்களாகும். இப்படி மன்றிலும், மனதிலும், வெளியிலும், ஒளியிலும், உயிரிலும் கலந்து நடனமிடும் கூத்தன், சிவப்பரம்பொருளின் அளப்பரிய ஆற்றலை அறிந்துணர யாரால் இயலும்?.

மேலும் திருமந்திரப் பாடல் எண் 2740 இல்

**அடியார் அரன்அடி ஆனந்தம் கண்டோர்**
**அடியார் ஆனவர் அத்தர் அருள் உற்றோர்**
**அடி ஆர்பவரே அடியவர் ஆமால்**
**அடியார் பொன்னம்பலத்து ஆடல் கண்டாரே**

சிவபெருமான் திருவருளால், அவன் திருவடிப் பேறு பெற்றவர்களே, சிவானந்தம் அடைந்தவர்களே, சிவனடியார் ஆவர். சிவனுக்கே அடிமையாகி, சிவனருள் பெற்றவர்களே சிவனடியார் எனப்படும் மெய்யடியார் ஆவர். மேலும் சிவபெருமான் திருவடி இன்பத்தை எண்ணி, அதையே இடையறாது சிந்தித்திருப்பவர்களே சிவனருள் பெற்ற சீலர் ஆவர். இவர்களே இறைவன் பொன்னம்பலத்தில் ஆடும் திருநடனம் கண்டு களிக்கும் பேறு பெற்றவராவார்.

மேலும் திருமந்திரப் பாடல் 2790 இல்

**இருவரும் காண எழில் அம்பலத்தே**
**உருவோடு அருவோடு ஒரு ரூபாரூபமாய்த்**
**திருவருட் சத்திக்குள் சித்தா னந்தன்**
**அருளுருவாக நின்று ஆடல் உற்றானே**

பதஞ்சலி, புலிக்காலுடைய வியாக்கிர பாதர் என்னும் இரு தவமுனிவர்களும் காணத் தில்லைச் சிற்றம்பலத்தே திருநடனம் புரிந்தருளினான் சிவப் பரம்பொருள். உருவமாயும், அருவமாயும் உள்ள இறைவன், திருவருள் சக்தியாகிய உமையின் மனத்துள்ளே மகிழ்ச்சியை விளைக்கின்ற சித்தானந்த சிவமூர்த்தி, அம்பலத்தில் அருவடிவாக நின்று திருநடம் புரிகின்றான்.

2. இறைவன் திரிபுர தாண்டவம் [வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி] ஆடிய குற்றாலம் குற்றாலநாதர் ஆலய நடராஜர் சன்னிதியே சித்திர சபை [சித்திர அம்பலம், சித்திர மன்றம்] ஆகும். இத் திரு நடனத்தை கண்டுகளித்தவர் பிரம்மதேவன்.

3. இறைவன் ஊர்த்துவ தாண்டவம் [வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி] ஆடிய, திருவாலங்காட்டில் உள்ள ஆலய நடராஜர் சன்னிதியே இரத்தின சபை [இரத்தின அம்பலம், மணி மன்றம்] ஆகும். இத் திரு நடனத்தை கண்டுகளித்தவர் காரைக்கால் அம்மையார்.

4. இறைவன் சந்தியா தாண்டவம் [இடதுகாலை ஊன்றி, வலது காலைத் தூக்கி] ஆடிய மதுரையில் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய நடராஜர் சன்னிதியே வெள்ளி சபை [வெள்ளியம்பலம், வெள்ளி மன்றம்] ஆகும். இத் திருநடனத்தையும் கண்டுகளித்தவர்கள் பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர் ஆகியோர்.

5. இறைவன் திருத்தாண்டவம் [வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி] ஆடிய திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் சந்தன சபாபதி ஆலய நடராஜர் சன்னிதியே தாமிர சபை [தாமிர அம்பலம், தாமிர மன்றம்] ஆகும்.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# குரு தட்சணை

நாம் குரு தட்சணையாக நாம் விரும்புவதை ஆசிரியர்களுக்குக் கொடுப்ப வழக்கம். பரதநாட்டிய அரங்கேற்றம், சங்கீத அரங்கேற்றம் நடக்கின்ற போது ஆசிரியர்களுக்கு மாணவர்கள் தாம் கற்ற வித்தையை மதித்து கற்றுத் தந்த குருவுக்கு குரு தட்சணை கொடுத்து மகிழ்ச்சி அடைவார்கள். இவ்வளவு தொகை குரு தட்சணையாக எனக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுப்பெறும் ஆசிரியர்களும் இருக்கின்றார்கள்.

ஆசிரியர் கேட்காமலே மாணவர்கள் விரும்பிக் கொடுக்கும் தொகையைக் குருதட்சணையாகப் பெற்றுக் கொள்ளும் ஆசிரியர்களும் இருக்கின்றார்கள். குருதட்சணை கொடுப்பதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் மனம் என்பது முதல் இடத்தில் வந்து அமர்ந்து கொள்ளுகின்றது. இந்த மனம் இணக்கம் ஏற்படுவதற்கு கற்பித்தல் முறை முன்னிலையில் நிற்கின்றது. இக்கருத்தை மனதில் நிறுத்தி இலக்கியத்திலே ஒரு குரு தட்சணை பற்றி நாம் பார்ப்போம்.

மகத நாட்டைச் சேர்ந்த ஹிரண்ய தனு என்னும் மன்னனின் மகனே ஏகலைவன். வேட்டுவ குலத்தைச் சேர்ந்திருந்தாலும்; ஒடுக்கப்பட்ட நிஷாத மக்களுக்கு இளவரசன் ஆவான். இந்த மகதநாடு அஸ்தினாபுரத்திற்கு அருகே அமைந்து இருந்தமையால் அர்ச்சுனன், துரியோதனன் ஆகியோர் துரோணாச்சாரியாரிடம் வில் வில்வித்தை பயில்வதைக் காண்கின்றான். அவர் கற்பிக்கும் முறையில் ஆசை கொள்கின்றான். அவரிடம் எப்படியாவது சீடனாக

சேர்ந்து வில்வித்தை பயில வேண்டும் என்று ஆசை கொள்ளுகின்றான். இங்கு கற்பித்தலின் கவர்ச்சியை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. கற்பித்தல் என்பது ஒரு கலை. பல பட்டங்களைப் பெற்று இருப்பவர்களுக்குக் கூட கற்பிக்கும் முறை என்பது தெரியாமல் இருக்கும். அக்கலை தெரிந்த ஆசிரியர்களே மாணவர்களின் மனதில் இடம்பிடிக்கின்றார்கள். அந்த ஆசிரியர்களை மேதாவிகளாகவே மாணவர்கள் கருதுகின்றார்கள். இதை மனதில் பதித்து ஏகலைவனையும் துரோணரையும் அணுகுவோம்.

துரோணரிடம் தனக்கு வில்வித்தை கற்றுத் தரும்படி ஏகலைவன் கேட்கின்றான். ஒரு வேட்டுவ குலத்தில் பிறந்தவனுக்கு வில்வித்தை கற்றுத் தர முடியாது என துரோணர் மறுக்கின்றார். இதையிட்டு ஏகலைவன் கோபம் கொள்ளாது, துரோணரைச்

சிலையாக முன்னிறுத்தி அவரைத் தனது குருவாகக் கொண்டு வில்வித்தை கற்கின்றான். எதுவானாலும் ஒரு வேடுவ குலத்தில் பிறந்த ஒருவனுக்கு வில்வித்தை ஒன்றும் கடினமான காரியமல்ல. ஒரு கற்கின்ற மாணவனுக்கு ஆசிரியர் ஒன்றும்



முக்கியமல்ல. ஒரு வழிகாட்டி மாத்திரமே ஆகும். ஆனால், அவனின் நம்பிக்கை அந்த ஆசிரியர். அந்த நம்பிக்கையே ஏகலைவனுக்கு துரோணாச் சாரியாராக அமைகின்றது.

ஒரு அமாவாசையிலே ஒரு நாய் குரைக்கும் சத்தம் தன்னுடைய நித்திரையை குலைக்கும் போது வில்வித்தையிலே சிறந்த வீரனான ஏகலைவன், அந்த நாயின் வாயைக் கட்டுவதற்காக ஒலி வந்த திசையை நோக்கி 7 அம்புகளைப் பாய்சுகின்றான். ஒலி வந்த இடமான நாயினுடைய வாயினுள் அத்தனை அம்புகளும் சென்று வாயைக் கட்டிப் போடுகின்றது. என்னைத் தவிர வேறு யாரும் இக்கலையை அறிந்திருக்க முடியாது என்னும் எண்ணப் போக்கில் இருந்த அர்ச்சுனன் இந்த நாயைக் காண்கின்றான். இதனை யார் செய்திருக்க முடியும் என்று பொறாமை கொள்ளுகின்றான். துரோணாச்சாரியாரிடம் கேட்கின்றான். காட்டிலே அவ்வித்தையைச் செய்தவனை துரோணரும் அர்ச்சுனனும் தேடிப் போகின்றனர். ஏகலைவனைக் காணுகின்றனர். இதனைக் கற்பித்த குரு யார் என்று ஏகலைவனை வினாவ அவனும் துரோணாச்சாரின் சிலையைக் காட்டி அவரே தன்னுடைய குரு என்கின்றான். துரோணாச்சாரியாரும் குருதட்சணையாக ஏகலைவனுடைய வலது கை கட்டைவிரலைக் கேட்கின்றார். மறுப்புத் தெரிவிக்காத ஏகலைவனும் தன்னுடைய கட்டைவிரலை அவருக்குக் குருதட்சணையாகக் கொடுக்கின்றான். இங்கு குருதட்சணை கொடுப்பது தருமம் என்று ஏகலைவன் கருதுகின்றான். கட்டைவிரலைக் கேட்பது சரியா என்னும் கேள்வி காலம் காலமாகக் கேட்கப்படும் கேள்வி. குருதட்சணை கேட்கும் போது யாரிடம் எது கேட்க வேண்டும் என்னும் அடிப்படை அறிவு ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டியது அவசியம். இதுவே மறுவாசிப்பில் அலசப்பட வேண்டிய அறிவாக இருக்கின்றது.

துரோணாச்சாரியார் ஏகலைவனுக்கு வில்வித்தை கற்பிக்க மறுப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆசிரிய மமதையாக இருக்கலாம். இல்லையெனில் அரசகுமாரர்கள் கற்கும் இடத்தில் ஒரு வேடுவக் குலத்து மனிதன் கற்பது தராதரக் குறைவாக மற்றைய அரசகுமாரார்கள் நினைத்து மறுப்புத் தெரிவிப்பார்கள் என்ற காரணமாகவும் இருக்கலாம்.

ஒரு வேடுவன் இவ்வாறு திறமையுடன் இருந்தால் சட்டதிட்டங்களை மீறும் வழியில் தன்னுடைய திறமையைப் பிரயோகிப்பான் என்ற எண்ணப் போக்கும் காரணமாக இருக்கலாம். இதைவிட வேடுவ குலத்தில் வளருகின்ற ஒருவனுக்கு இரத்தத்திலேயே வில்வித்தை ஊறியிருக்கும். இக்கலையை ஏகலைவன் ஏன் துரோணாச்சாரியாரின் அவமானச் சொல்லைத் தாங்கி அவரை குருவாகக் கொள்ள வேண்டும் என்பதும் கேள்விக்குறியே! கற்கும் வல்லமையுள்ளவன் ஒரு ஆசிரியரையே தஞ்சம் அடைந்து கிடக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நாம் கற்கின்ற கல்வி எங்கிருந்து கிடைக்கப்பெற்றது என்பதைப் பொறுத்தே அதற்குப் பெருமை அமைகின்றது. இது எக்காலத்திற்கும் உரிய பொது விதியாகப் படுகின்றது. யுஉடநண பல்கலைக்கழகத்தில் டீயரடிபெநணநைரச கல்வி கற்பவர்களுக்கு ஒரு மதிப்பு இருப்பதை நாம் அறிவோம். அதுபோலவே துரோணரின் மாணவன் என்பதில் ஏகலைவனுக்குப் பெருமை இருந்தது.

ஏகலைவனும் வேடனாகப் பிறந்தது என் குற்றமில்லை என்று எதிர்த்துப் பேசியிருக்கலாம். குருதட்சணையாக என்னுடைய விரலைத் தரமுடியாது என்று சொல்லியிருக்கலாம். ஆனால், ஏகலைவன் தருமத்தை மதிக்கும் ஒரு மாணவனாக இருந்தான். அதுபோலவே மாணவர்கள் தருமத்தை மதித்து குருதட்சணை வழங்குகின்றார்கள்.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# நிழலும் நிழலும் தீண்டுவதற்கும் வெளிச்சம் வேண்டும்

பாரதி இவ்வுலகை சக்தியின் லீலையாகக் காண்கிறார். லீலை இவ்வுலகு என்றும், இவ்வுலகு இனிது என்றும் திரும்பத் திரும்பச் சொல்வதில் மகிழ்ச்சி உற்றார். இதுவே வாழ்வின் மந்திரம் என்பதை பாரதி பக்தர் நன்கு அறிவர்.

பாரதியின் மொழி , உடலும் உடலும் உரசிக்கொள்வதை சொல்ல முனையவில்லை. நிழலும் நிழலும் தீண்டுவதற்கும் வெளிச்சம் வேண்டும் என்ற சூட்சுமத்தை சொல்கிறது.

பாரதியின் வசனகவிக்குள் கண்களை புதைத்தால் புரியும், புதைந்தது நம் கண்கள் அல்ல , ஆழ்மனம் என்று. உள்ளத்தை ஊற்றி ஒரு வரி படித்தாலே போதும், அவன் கவித்தட்டில் எம்மை ஏற்றி வியனுலகு காட்டுவான்.

மந்திரக்காரன் அல்ல, தந்திரம் செய்து எம்மை வசியம் செய்வதும் அவன் நோக்கம் அல்ல. நம் எந்திரியங்களை வென்றிட சூத்திரம் சொல்கிறான். பத்திரமாய் படிப்பவரே பாத்திரம் ஆவர். அவன் உண்மைக்குடிலுக்குள் அகப்பட்டு சுதந்திரமாவர்.

அசைகின்ற இலையும், ஆற்றிலிட்ட கல்லின் சலனமும் , ஓடுகின்ற மேகமும், இசைகின்ற காற்றும், மழையும், மாலையும், காலை சூரியனும், மலையின் தொடரும், குளிர் நிலவும், சிட்டு குருவியும், குழந்தையின் சிரிப்பும், மலரும் மொட்டும் இன்னும் இன்னும் என உலகத்து விந்தை யாவிலும் கலையின் விம்பத்தைக் காண்பவன் கலைஞன். .அவன் கண்களின் பார்வையில் முப்பரிமாணக் காட்சி இருக்கும். இன்னும் சிலர்க்கு பல பரிமாணங்கள் தோன்றும். அவனின் ஒற்றை பார்வைக்குள் ஒளிந்துள்ள விடயங்களை அறிந்து கொள்ளும் ஆற்றல் கூட சாதாரண மக்களின் அறியாமை அறிவுக்கு இருக்காது. அணுவிலும் நுண்ணிய அவன் நெஞ்சம் அகிலம் முழுவதிலும் கலை அம்சத்தைக் காண்கிறது , உள்ளம் தெளிந்திட, உடல் வலிமை பெற்றிட, வாழ்க்கை



அமைதி கண்டிட , எதிலும் பேரின்பம் விளைய , படைப்பின் அருளை கணம் தோறும் உணர கலைஞானத்தை துடுப்பாக்கி , ஜீவ நதியைக் கடக்க முயல்கிறான். அந்த வகையில் வாழ்வின் நூதனத்தை சொல்லும் போதும் கலையை சம்பந்தப்படுத்தவல்ல மதிநுட்பம் நம் பாரதியிடத்து இருப்பதில் ஆச்சர்யம் இல்லை. அதனால் அவனோடு இசை இரண்டறக் கலந்து விடுகிறது.

> *''பாம்பு பிடாரன் குழலூதுகிறான்.*
> *குழலிலே இசை பிறந்ததா?*
> *தொளையிலே பிறந்ததா ?*
> *பாம்பு பிடாரன்*
> *மூச்சிலே பிறந்ததா ?''*

இப்படி ஓர் கேள்வி எழுப்பிகிறார். அதற்கு என்ன பதில் கூறுகிறார் பார்ப்போம்.

> *அவன் உள்ளத்திலே*
> *பிறந்ததுகுழலிலே வெளிப்பட்டது*
> *உள்ளம் தனியே ஒலிக்காது*
> *குழல் தனியே இசைபுரியாது.*
> *உள்ளம் குழலிலே ஒட்டாது. உள்ளம்*
> *மூச்சிலே ஒட்டும்.*
> *மூச்சு குழலிலே ஒட்டும் குழல் பாடும்.*
> *இது சக்தியின் லீலை.*

ஆஹா! என்ன அற்புதமான விளக்கம். ஆக, உள்ளத்தையும், குழலையும் இணைக்க மூன்றாவதாக ஒரு சாதனம் தேவைப்படுகிறது. அது தான் மூச்சு என்னும் சக்தி. இப்படித்தான் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் இணைக்க ஒரு குரு தேவைப்படுகிறது. உயிரற்ற கருவியை உயிருள்ள இசையாக மாற்ற கூடிய வல்லமை ஓர் கலைஞனிடத்தே உண்டு. அப்பேற்பட்ட கலைஞனை கடவுளின் உருவமாய் காண்கிறோம்.

''அவள் உள்ளத்திலே பாடுகிறாள் அது குழலின் தொளையிலே கேட்கிறது ''.

உயிர்ப்பான கலையை வெளிப்படுத்தவல்ல எந்த ஒரு கலைஞனின் உள்ளத்திலும் இறைவன் குடிகொண்டிருக்கிறார்.

உள்ளத்தின் வழியே தான் கலையின் ரசம் பிறக்கிறது. உள்ளத்திற்கோர் ஊறு விளைந்தால் கலையின் இருப்பிடத்தை இருள் கவ்விக்கொள்ளும் [ நிழலும் நிழலும் தீண்டுவதற்கும் வெளிச்சம் வேண்டும்.]

வெறும் புலன் இன்பத்தில் உடலும் உடலும் உரசும் யௌவன காட்சிகளை கண்விழித்திப் பார்ப்போருக்கு தெரியுமா உயிரும் உயிரும் தீண்டிக் கொண்டால் பிறக்கும் கலையின் ஆழம் ?

இந்த வசனகவியின் அடுத்து வரும் வரிகளை ஆழ்ந்து கவனியுங்கள்.

> *'தொம்பப் பிள்ளைகள் பிச்சைக்கு*
> *கத்துகின்றன*
> *பிடாரன் குழலையும் தொம்பக்*
> *குழந்தைகளின் குரலையும்*
> *யார் சுருதி சேர்த்து விட்டது?'*

பிடாரன் குழலுக்கும், பிச்சைக்கு அழும் குழந்தைக்கும் என்ன சம்பந்தம்? பல்வேறுபட்ட முரண்பாடுகளுக்குள் வாழ்க்கை சிக்கி இருப்பதாய் சில சமயங்களில் எண்ணத் தோன்றும். ஒரே குடும்பத்தில் இருந்தாலும் எண்ணங்கள் செய்கைகளில் எண்ணற்ற வேறுபாடு இருப்பதைக் கூட காண்போம். ஒத்த கருத்துள்ள உள்ளங்களை மட்டுமல்ல , ஒவ்வாது என்று கருதுபவற்றையும் சேர்த்து வைப்பதும் இந்த படைப்பின் லீலை தான் என்று பாரதி கூறுகிறார்.

> *''பொருந்தாத பொருள்களைப்*
> *பொருத்திவைத்து அதிலே*
> *இசையுண்டாக்குதல் - சக்தி ''*

பாம்பு பிடாரன் குழல் ஊதுகிறான்; பிள்ளைகள் பிச்சைக்கு கத்துகின்றனர்; அதே சமயம் ஜரிகை வேணும் ஜரிகை! என்று ஒருவன் கத்திக்கொண்டு போகிறான் . யாவும் ஒரே சுருதியில் இருக்கிறது. அங்கே அகக்கண் திறக்கிறது. உட்பொருளைக் கண்டு கொள்கிறார் பாரதி.

ஆ ! பொருள் கண்டு கொண்டேன் .

பிடாரன் உயிரிலும் , தொம்பக் குழந்தைகளின் உயிரிலும், ஜரிகைக்காரன் உயிரிலும் ஒரே சக்தி விளையாடுகிறது.

27 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Sari 1
Sari 1
தரமான ஆடைகள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
எம்மிடம் தங்க நகைகளும் பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr.49, 60329 Frankfurt am Main
0152 1923 9663
Opening Hours: Mon- Sat 10.00 am- 20.00 pm
https://www.facebook.com/sari1fashionhouse



Frankfurt நகரில்...
New
ASIA LAND
Frankfurt (Main)
Hauptbahnhof
முன்பாக 50 மீற்றர்
தொலைவில்
அமைந்துள்ளது
மளிகைப்பொருட்கள் மற்றும்
மரக்கறி, கடலுணவுப்பொருட்கள்
அனைத்தும் என்றும் சிறந்த
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TAUNUSSTRASSE 49
60329 FRANKFURT
Tel: 069 23 35 35 | Fax: 069 24009760

# நம்பினால் நம்புங்கள் ஆனால் உண்மை!

சிவப்பிரியன்



ஒருவருக்கு பெண் பார்க்க பெண் கறுப்பி என்று மறுத்துவிட்டார். இன்னொருவருக்கு பெண் பார்க்க பெண் சிவப்பி என்று மறுத்து விட்டான். அப்படி என்றால் கறுப்பழகா அல்லது சிவப்பழகா? இதுபோலவே அமெரிக்காவில் உள்ள முட்டையை இங்கிலாந்தில் விற்கத்தடை. இங்கிலாந்தில் உள்ள முட்டையை அமெரிக்கா வில் விற்கத்தடை. காரணம் என்னவோ கறுப்பி சிவப்பிபோல்த்தான். அதாவது அமெரிக்காவில் கழுவிய முட்டை. அதனை இங்கிலாந்தில் விற்கமுடியாது. இங்கிலாந்தில் கழுவாத முட்டை அதனை அமெரிக்காவில் விற்கமுடியாது.




இலங்கையில் வெளிவந்த முதலாவது சிறுவர் மாத இதழ் எது தெரியுமா.? உங்கள் கைகளில் இருக்கும் வெற்றிமணியே இலங் கையில் வெளிவந்த முதலாவது சிறுவர் மாத இதழ். இது 1950 அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களால் நாலப்பிட்டி கதிரேசன் பாடசாலை யில் ஆசிரியராக கடமைபுரிந்தவேளை வெளி யிடப்பட்டது. முழுக்க சிறுவர்களுக்கான சஞ்சிகையாக அவர்களது ஆக்கங்களையும் அவர்களுக்கு நல்வழிகாட்டும் கட்டுரைக ளுமாக வெளிவந்தது. சிறுவர் சஞ்சிகை 1980 இல் ஆசிரியரது மறைவுடன் நின்று விட்டது. காலத்தின் மாற்றத்தால் 1994 முதல் யேர்மனியில் இருந்து வெற்றிமணி பத்திரிகை யாக வெளிவருகின்றது.

அமெரிக்காவில் உள்ள மிருக்காட்சி சாலை களில் இருக்கும் விலங்குகளைவிட அதிக மான விலங்குகள் அமெரிக்கர்களது இல்லங் களில் வசிக்கின்றன. வீடுகளில் மட்டும் 5000 மேற்பட்ட புலிகள் இருக்கின்றன. இவற்றை விட பாம்புகள் அவர்களது படுக்கை அறையி லேயே படுத்தும் உறங்குகின்றன. சில வருடங்க ளுக்கு முன் யேர்மனியில் சட்டத்துக்கு புறம்பாக வளாத்த பாம்பு ஒன்று சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைவிட்டுப்பு பறப்பட அந்த நகரத்தையே தீயணைப்பு படையினரும் பொலிசாரும் சுற்றிவ ளைத்து தேடியது நினைவு இருக்கலாம்.



More exotic animals live in American homes than in American zoos. It's estimated that there are at least 5,000 tigers held captive in private homes. And nobody is licensing or regulating these pet owners.



ஒரு செக்கனுக்கு உலகில் பிறக்கும் குழந்தை களின் எண்ணிக்கைகு சற்றுக்கறைவாக இன் னும் ஒன்று பிறக்கிறது. அது எது தெரியுமா? கம்பேர்க்கர். [Mcdonald's ] இது செக்கனுக்கு 75க்கு மேல் வெளிவருகிறது.



In 1799 a boy found a 17lb. rock in a creek in North Carolina and used it as a doorstop. It was gold.

ஒரு இளைஞன் 1799 இல் 17 இறாத்தல் எடையுடைய ஒரு கல்லினை கண்டு எடுத்தார். அதனை கதவு காற்றுக்கு அடிபடாமல் இருப்ப தற்காக பாவித்தார். கண்டெடுத்த இடம் creek in North Carolina. கண்டு எடுத்த கல் வெறும் கல் அல்ல! அது சொக்த் தங்கம். அது பின்பே தெரியவந்தது.



A man in China bought a first class ticket on China Eastern Airlines, went to the airport every day for almost a year, ate food for free at their lounge, changed his ticket for the next day after eating about 300 times, then cancelled his ticket for a full refund before validity expired.


சீனாவில் ஒருவர் முதல்தர வகுப்பு விமானச்சீட்டை (on China Eastern Airlines) வாங்கினார். பின் தினமும் விமான நிலையம் சென்று இலவசமாக மதிய உணவை உண் டார். உண்டதும் பிரயாணச்சீட்டை மறுநா ளுக்கு மாற்றிவிட்டு வீடுதிரும்புவார். இப்படி பல மாதங்கள் மதிய உணவினை இலவசமாக உண்டுவிட்டு, இறுதியில் விமானச் சீடை முழுமையாக திருப்பி எடுத்துக்கொண்டார். [அதாவது பயணத்தை இரத்துச்செய்து கொண் டார்.] மதிய உணவை இலவசமாகப் பெற்ற மதிக்குச் சொந்தக்காரன் அவன்?












# நன்றியுணர்வு நலிந்து போகிறதா?

அந்த நிறுவனத்தின் ஹைச். ஆர் அலுவலகத்தில் அமைதியாய் உட்கார்ந்திருந்தார் குருமூர்த்தி. அவரது கண்களில் திட்டுத் திட்டாய்த் துயரம் அமர்ந்திருந்தது. எப்போது வேண்டுமானாலும் அணை உடைக்கக் காத்திருந்தது கண்ணீர். அலுவலகத்தில் அரசல் புரசலாய்க் கேட்ட ஒரு செய்தி நிஜமென்றாகிவிட்டது. வாழ்வின் விளிம்பில், கைப்பிடியற்ற மலை முகட்டில் உட்கார்ந்திருக்கும் அவஸ்தை அவருக்கு. சலனமேயில்லாத விழிகளுடன் ஹைச்.ஆர் தலைவர் பேசினார்.

வெரி சாரி. ஆபீஸ்ல 50 வயசுக்கு மேல இருக்கிறவங்களை ரிலீஸ் பண்ண சொல்லிட்டாங்க நீங்களும் அந்த லிஸ்ட்ல வரீங்க நீங்க உடனே ரிசைன் பண்ணிடுங்க, சாயங்காலமே உங்களை ரிலீஸ் பண்ணிடுறோம்

என்ன சார் இருபது வருஷமா இந்த ஆபீஸ்ல வேலை செய்யறேன். இந்த அலுவலகத்தோட ஒவ்வொரு வளர்ச்சியை நீங்க தொட்டுப் பாத்தாலும் என்னோட உழைப்போட இரத்தத் துளிகள் இருக்கும். இந்த அலுவலகத்தின் முன்னேற்றத்தோட எல்லா பாதைகளிலும் என்னோட வியர்வைத் துளிகள் ஈரம் காயாம இருக்கும். இப்படி சட்டுன்னு கிளம்புன்னு சொல்றீங்களே.. நியாயமா இருக்கா ?

‘‘உங்க கஷ்டம் புரியுது பட். எங்களால ஒண்ணும் பண்ண முடியல. இது எம்.டியோட டிசிஷன். நாங்க ஒண்ணும் பண்ண முடியாது. வி ஆர் ஹெல்ப்லெஸ்’’

‘‘உங்க கஷ்டம் புரியுதுன்னு – சொல்ற யாருக்குமே எங்க கஷ்டம் புரியாது சார். உங்களால ஏதும் பண்ண முடியாதுன்னா ஏன் சார் ஹைச்.ஆர் ந்னு இருக்கீங்க? மக்களோட குறைகளைத் தீர்க்கிறது தானே உங்க வேலை மக்களுக்காக பேச மாட்டீங்களா’’

‘‘சீ நிறுவனம் மோசமான நிலையில போயிட்டிருக்கிறது உங்களுக்கே தெரியும்’’ ஹைச் ஆர் சொல்லி முடிக்கும் முன் குருமூர்த்தி இடைமறித்தார்.

‘‘லாபம் குறைஞ்சிருக்குன்னு சொல்லுங்க. லாபம் டபுள் ஆனப்போ எங்க சம்பளம் டபுள் ஆகல. லாபம் பாதியானப்போ மட்டும் ஊழியர்கள் பாதியாகணுமா.. எங்க சார் போச்சு உங்க நன்றியுணர்வு ?’’

‘‘உங்க லெக்சரைக் கேக்க நேரமில்லை. இன்னிக்கு நீங்க ரிசைன் பண்ணினா உங்களுக்குக் கிடைக்க வேண்டிய செட்டில்மெண்ட் பணம் கிடைக்கும். இல்லேன்னா, டெர்மினேட் பண்ணிடுவோம். எதுவும் கிடைக்காது. . முடிவெடுக்க வேண்டியது நீங்க தான்’’

‘‘நன்றியுணர்வு மட்டுமில்ல, மனிதாபிமானமும் கூட காணாம போயிடுச்சுன்னு தெரியுது. ’’

‘‘ஐம் சாரி என்னோட வேலையை நான் பண்ணிட்டிருக்கேன். இவ்ளோ வருஷம் கம்பெனி உங்களுக்கு சம்பளம் தந்து பாதுகாத்ததுக்கு நன்றி சொல்லிட்டு கிளம்புங்க’’ ஹைச் ஆர் சற்றும் உணர்ச்சியற்ற வெறுப்பின் தொனியில் சொல்ல குருமூர்த்தி எழுந்தார். தனது அறைக்குச் சென்று ராஜினமா ஃபார்மை நிரப்பத் துவங்கினார். கலங்கிய அவரது விழிநீரில் இரண்டு பிள்ளைகளின் படிப்பும் எதிர்காலமும் ஈரமாகிக் கொண்டிருந்தது.

நன்றியுணர்வு என்பது இலாபம் கொடுக்கும் வரை பிந்தொடரும் நாயாக மாறிவிட்டது. அதன் முகங்களில் போலித்தனத்தின் எச்சில் வடிந்து கொண்டிருக்கிறது. நன்றியுணர்வு கெட்ட முதலாளித்துவ சமூகம், நன்றியுணர்வற்ற சமூகத்தையே கட்டமைத்துக் கொண்டிருக்கிறது.

கடந்த தலைமுறையின் வீதிகளில் நடந்து, இந்தத் தலைமுறையின் செயல்பாடுகளைக் கவனிப்பவர்களுக்கு இந்த நன்றியுணர்வின் வீழ்ச்சி மிகப்பெரிய அதிர்ச்சியாக இருக்கும். காரணம், நன்றியுணர்வு பழைய காலத்தில் அத்தனை வலுவாக இருந்தது. இன்றைக்கு கை தவறி விழுந்த மண்பானையாய் உடைந்து கிடக்கிறது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு – என்பதே பழைய கால விதியாக இருந்தது. அது ஒவ்வொரு சின்னச்

17 ஆம் பக்கம் பார்க்க...






சின்ன செயல்பாடுகளிலும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இருந்தது. உதாரணமாக, இயலாமையில் கை கொடுத்தவர்களை பயன் பெற்றவர்கள் கடைசி மூச்சு உள்ளவரை மறக்காமல் இருந்தார்கள்.

அவன் ஒருகாலத்துல கைதூக்கி விடாம இருந்திருந்தா. என மிகப் பெரிய உயரத்துக்குச் சென்றபின்பும் மக்கள் நன்றி பாராட்டினார்கள். இன்றைக்கு அது நீர்த்துப் போய்விட்டது என்பதில் சந்தேகமேயில்லை.

இப்போதெல்லாம் ஒரு செயலுக்கான நன்றியுணர்வு என்பது பூவில் விழுந்த பனித்துளியைப் போல சிறிது காலமே தங்கி நிற்கிறது. நாட்களில் வெயிலில் அது ஆவியாகிவிடுகிறது.

அப்பாவின் முன்னால் கைகட்டி நின்று, ஐயா.. என்றழைத்த காலங்கள் உண்டு அதெல்லாம் பழைய கதை. அப்படி என்னத்த பெருசா செஞ்சுட்டீங்க என பெற்றோரைப் பார்த்தே எதிர்த்துக் கேள்வி கேட்கும் தலைமுறை சகஜமாகிவிட்டது. நன்றியுணர்வு குடும்பங்களிலேயே ஆவியாகிக் கொண்டிருக்கிறது.

நன்றியுணர்வுக்கு அடிப்படையான தேவை, நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் எனும் உணர்வு தான். இந்த இயற்கையினால், இந்த பிரபஞ்சத்தினால், இந்தப் பிரபஞ்சத்தின் படைப்பாளியால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் எனும் உணர்வு இருந்தால் நமக்கு நன்றியுணர்வு ஆழியாய் பெருகும் என்பதில் சந்தேகமில்லை.

இயேசுவின் வாழ்க்கையில் ஒரு கதை உண்டு. ஒரு முறை பத்து தொழுநோயாளிகளுக்கு அவர் நலமளித்தார். தொழுநோயாளிகள் சமூகத்தில் விலக்கி வைக்கப்பட்ட காலகட்டம் அது. அவர்கள் ஊருக்குள் நுழைய முடியாது. எந்த நிகழ்விலும் கலந்து கொள்ள முடியாது. ஊர்ப்பக்கம் வரவேண்டுமெனில் தீட்டு தீட்டு என கத்திக் கொண்டே வரவேண்டும். ஒரு நீண்ட குச்சியின் நுனியில் ஒரு குடுவையைக் கட்டி சுமந்து வருவார்கள். தண்ணீர் வேண்டுமெனில் ஏதேனும் வீட்டில் அருகே தொலைவில் நின்று கொண்டே அந்தக் குச்சியை நீட்டுவார்கள். வீட்டிலுள்ளவர்கள் அதை தப்பித் தவறியும் தொட்டு விடாத அதீத கவனத்துடன், அதற்கான பழைய பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு அதில் ஊற்றுவார்கள்.

அத்தகைய சமூக இடைவெளி



அன்று நிலவியது. இயேசு அந்த சூழலில் தொலைவிலிருந்து கதறிய பத்து தொழுநோயாளிகளுக்கு நலமளித்தார். நலமடைந்ததை அறிந்த அந்தப் பத்து பேரில் ஒரே ஒருவர் மட்டும் இயேசுவைத் தேடி வந்து நன்றி சொல்லி தாழ்பணிந்தார். இயேசு கேட்டார், என்னாச்சு பத்து பேருக்கும் சுகம் கிடைக்கலையா ? மற்ற ஒன்பது பேர் எங்கே ?. பெற்றதற்கு நன்றி சொல்பவர்கள் இறைவனின் பிரியத்துக்குரியவர்களாகிறார்கள். காரணம், நன்றியுடையவர்களாய் இருப்பவர்கள், தாங்கள் கடவுளிடமிருந்து பெற்றிருக்கிறோம் எனும் உணர்வைக் கொண்டிருக்கிறார்கள்.



அதனால் தான் உண்மையான ஆன்மீகவாதிகள், தங்களுடைய ஒவ்வொரு நாளுக்காகவும், ஒவ்வொரு நிமிடத்திற்காகவும், ஒவ்வொரு செயலுக்காகவும், ஒவ்வொரு உணவுக்காகவும், ஒவ்வொரு சின்னச் சின்ன நிகழ்வுக்காகவும் கூட கடவுளுக்கு நன்றி செலுத்துவார்கள். காரணம் எல்லாமே கடவுளின் அருள் எனும் புரிதல் தான்.

எல்லாம் தன்னால் நிகழ்கின்றன எனும் மனநிலையும். எல்லாம் தனக்கே கிடைக்கவேண்டும் எனும் சுயநலமும் உள்ளவர்கள் எக்காலத்திலும் நன்றி உணர்வு உடையவர்களாய் வாழவே முடியாது.

மகிழ்ச்சியாய் இருக்கும் போது நன்றி சொல்வது சாதாரண விஷயம். நன்றி சொல்வதால் மகிழ்ச்சியாய் இருப்பதே உயர்ந்த நிலை. உண்மையில் நமக்கு கிடைக்கின்ற பொருட்களை விட அதிகமாய் கிடைக்காத பொருளுக்கு நன்றி சொல்பவர்களாக இருக்க வேண்டும். அதனால் தான் நண்பனுக்கு மட்டுமல்ல, எதிரிக்கும் நன்றி சொல் என்பார்கள். நமது வாழ்க்கையை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்.

நன்றியுணர்வை வெளிப்படுத்தும் போது நமது மனம் இலேசாகிறது. ஒரு மரம் தனது கனிகளை வேர்களுக்குள்ளே ஒளித்து வைத்திருந்தால் என்ன பயன். அதை பிறருக்குத் தெரியும்படி கிளைகளில் பதித்து வைக்கும்போது தானே பயனுடையதாகிறது. அப்படித் தான் நன்றியுணர்வும், வார்த்தைகளாலும் செயல்களாலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். வெளிப்படாத நீரூற்றும், வெளிப்படுத்தப்படாத நன்றியுணர்வும் பிறருக்குப் பயனற்றுப் போகும்.

நம்மைச் சுற்றிப் பார்ப்போம். நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் எத்தனையோ பேர் நமக்கு உதவி செய்கிறார்கள். அவர்களுக்கு நன்றி சொல்கிறோமா ? நமக்கு ஒரு காபி போட்டுத் தரும் வேலைக்கார அம்மா. நம்மை ஒரு இடத்துக்கு அழைத்துச் செல்லும் டிரைவர் அண்ணா, நமக்கு பொருட்களை எடுத்துத் தரும் ஒரு விற்பனைப் பிரதிநிதி, நம்ம தெருவில் குப்பையை அள்ளும் ஒரு கார்ப்பரேஷன் பணியாளர். இப்படி நாம் நன்றி சொல்ல வேண்டிய நபர்கள் எத்தனை எத்தனையோ.

புன்னகை ஒரு தொற்று வியாதி என்பார்கள். ஒருவருக்குக் கொடுக்க, அதை அவர் பெற்றுக் கொண்டு அடுத்தவருக்குக் கொடுக்க, இப்படி கொரோனா போல பற்றிப் படரும் ஒரு விஷயம் தான் புன்னகை. நன்றியும் அது போல தான். நாம் நன்றியைச் சொல்லச் சொல்ல அது அடுத்தடுத்த நபர்களுக்கு சென்று கொண்டே இருக்கும். நன்றி சொல்தல் ஒருவித நேர் சிந்தனையை நமக்குள் ஊட்டும். வாழ்க்கையில் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்கிறது என நமக்கே ஒரு புத்துணர்ச்சியை அது தரும்.

நன்றியுணர்வோடு இருப்பவர்களுக்கு நோய் குறைவாக இருக்கும், ஆரோக்கியம் வலிமையாக இருக்கும் என்பது மருத்துவக் கணக்கு. நன்றியுணர்வு உடையவர்கள் மன அழுத்தம் இல்லாமல் இருப்பார்கள் என்பது உளவியல் கணக்கு. நன்றியுணர்வு வெறும் உணர்வல்ல, நம் உடலோடும் மனதோடும் பின்னிப் பிணைந்தது என்பதை இதன் மூலம் புரிது கொள்ளலாம். நம்முடைய ஆனந்தத்திற்கு இது அடிப்படையாய் மாறிவிடுகிறது.

நன்றியுணர்வு நட்பைச் சம்பாதித்துத் தரும். இருக்கின்ற உறவுகளை வலுவாகும். வாழ்க்கை என்பது எதையெல்லாம் சேர்க்கிறோம் என்பதல்ல, உறவுகளோடு சேர்கிறோம் என்பதில் தான் அமைகிறது. மக்களோடு இணைந்து வாழ்கின்ற மிகப்பெரிய வலிமையை நன்றியுணர்வு தருகிறது.

செஞ்சோற்றுக் கடனுக்காக வாழ்ந்த கர்ணனின் கதை முதல், நமது சமூக வீதிகளில் உப்பிட்ட வரை உள்ளளவும் நினைக்கின்ற கதைகள் வரை நமக்குச் சொல்வதெல்லாம் நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதே. நன்றியுணர்வு நலிந்து போகிறதே என அழுவதல்ல, அதை வலுப்படுத்த எழுவதே இன்றைய தேவை. அதை நம்மிடமிருந்து, நம்முடைய குடும்பத்திலிருந்து துவங்குவோம்.

இந்தக் கட்டுரையைப் பிரசுரித்த பேரன்புக்குரிய என்னுயிர்த் தந்தைக்கும், பொறுமையுடன் வாசித்த உங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி கூறி நன்றிப் பயணத்தை நான் தொடங்கி வைக்கிறேன். தொடர்வோம்.








MAAYA'S
EXPRESS
SRI LANKAN AND INDIAN FOOD | CATERING & PARTY SERVICE
எமது உணவகத்தில் 20 – 25 பேர் வரை
அமர்ந்து எம் பாரம்பரிய
சைவ, அசைவ உணவுகளை நாவின்
சுவைக் கேற்ப சுடச் சுட வாழை இலையில் உண்டு மகிழ்ந்திட!
Taste the Difference
சிறியவர், பெரியவர் என அனைவரதும் நாவையும் சுண்டி இழுக்கும் வகையில்
சைவ, அசைவ ஆகாரங்களை சுடச் சுட தங்களது சுவைக்கேற்ப
பிரத்தியேகத் தயாரிப்பில் வழங்கக் காத்திருக்கின்றது மாயாஸ்
உங்கள் இல்லத்தின் கொண்டாட்டங்களுக்கும்
நல்ல தரத்திலும், சுவையிலும் உணவுகள் வேண்டுமா?
E-Mail: maayas@outlook.de
Rheinische Str. 56 | 44137 | Dortmund
Bolte Str. 51 | 44894 | Bochum
தொடர்புகளுக்கு : 0231 54 500 609

Dr.நிரோஷனின் அதிசய உலகம்



# நட்சத்திரத்திற்குள் நட்சத்திரம்- ஆச்சரியத்தின் உச்சக்கட்டம்

## வரும் காலத்தில் நாம் எப்படி உருவாக்கப்பட்டோம் என்பதையும் அறிந்துகொள்ள முடியும்

விண்வெளி இந்த சொல்லில் இருப்பது போலவே நமது பிரபஞ்சம் ஒரு மாபெரும் வெளி அதாவது வெற்றிடம் தான். இருந்தும் நமது விண்வெளியில் காணப்படும் ஆச்சரியங்களும், அதிசயங்களும் போல் வேறெங்கும் காணவே முடியாது. சாதாரணமாகவே விண்வெளியில் காணப்படும் பொருட்கள், அவற்றின் அமைப்பு, சுற்று வட்டப் பாதை, அவற்றில் நிலவும் காலநிலை, பூமியிலிருந்து அவையிருக்கும் தூரம், விண்வெளியில் அதன் நிலை போன்ற பலதரப்பட்ட வித்தியாசமான கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அப்படிப் போவது மட்டுமில்லாமல், அந்தக் கேள்விகளுக்குப் பதில்களைக் கண்டறிவதிலேயே மாபெரும் குழப்பம் ஏற்பட்டுவிடும். அது ஏனென்றால், விண்வெளியில் எவ்வளவோ கற்பனை பண்ண முடிய இயலாத விஷயங்கள் இருக்கின்றன. அப்படி ஒரு அதிசயத்தைப் பற்றித் தான் இன்று கூறப்போகின்றேன் கேளுங்கள். உங்கள் எல்லோருக்குமே தெரியும், பொதுவாக நமது பிரபஞ்சத்தில் கோடி கோடிக் கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. சில வேளைகளில் இரு அல்லது பல நட்சத்திரங்கள் மிகவும் அருகே இருப்பதையும் அறிந்து இருப்பீர்கள், ஆனால் எப்போதாவது ஒரு நட்சத்திரத்திற்குள் இன்னுமொரு நட்சத்திரம் இருப்பதைப் பற்றி கேள்விப் பட்டிருக்கின்றீர்களா?

ஒரு நட்சத்திரத்திற்குள் எப்படி இன்னுமொரு நட்சத்திரம் இருக்க முடியும்? இதை **“ThorneŻytkow Object”** என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். இது ஒரு அனுமானம் அல்லது கற்பனை வகையிலான நட்சத்திரமாகவே இதுவரை கருதப்பட்டு வந்தது, ஆனால் இப்படி ஒரு நட்சத்திரம் உண்மையிலே விண்வெளியில் உள்ளது என்பதைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

சரி சரி, இதைப் பற்றித் தொடர்ந்து அறிவதற்கு முதல், **“Thorne–Żytkow Object”** என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். அது வேறொன்றும் இல்லை, ஒரு நட்சத்திரம், அதனது கருவாக இன்னுமொரு நட்சத்திரத்தைக் கொண்டால், அதை **mij Thorne-Zytkow Object** என்று அழைப்பார்கள். இதை முதலில் **Kip Thorne** மற்றும் **Anna Zytkow** ஆகிய கோட்பாட்டு இயற்பியலாளர்கள், அதாவது **Theoretical Physicist**, 1975ம் ஆண்டில் இப்படி ஒரு நட்சத்திரத்திற்குள் நட்சத்திரம் இருக்கலாம் என இயற்பியல் முறையில் யூகித்தனர். குறிப்பாக **red giant** என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் ஒரு சிவப்பு அரக்கன் எனும் நட்சத்திரத்தின் மையப்பகுதியில் ஒரு **Neutron Star** அதாவது நொதுமி விண்மீன் அமைந்திருக்கும். இது பொதுவாக இரண்டு நட்சத்திரங்கள் மோதிக்கொள்ளும்போது இவ்வாறு நடைபெற வாய்ப்புள்ளது. அதாவது ஒரு சிவப்பு அரக்கன் மிகவும் அடர்த்தி கூடிய ஒரு நொதுமி நட்சத்திரத்தினை தனது ஈர்ப்பு சக்தியினால் உள்ளிழுத்துக்கொண்டால் ஒரு நட்சத்திரத்திற்குள் இன்னுமொரு நட்சத்திரம் இருக்கும். இந்த சிறிய நட்சத்திரம்தான் பெரிய நட்சத்திரத்தின் மையப் பகுதியாக அமைந்துவிடுகிறது.

பொதுவாக ஒரு நட்சத்திரத்தை எடுத்துக் கொண்டால், அதில் பலவிதமான வேதியியல் தனிமங்கள் அடங்கியிருக்கும், அதாவது **Chemical Elements** இருக்கும். அடிப்படை தனிமங்களாகிய **Hydrogen** மற்றும் **Helium** இணைவுடன் பலவிதமான வாயுக்களையும், உலோகங்களையும் உருவாக்கின்றது. ஆனால் இந்த நட்சத்திரத்திற்குள் இருக்கும் நட்சத்திரத்தில் ஒரு விசேஷம் இருக்கிறது. அது என்னவென்றால், எல்லா நட்சத்திரங்கள் போலவே கருவில் இருக்கும் நட்சத்திரத்தில் முதல் நான் கூறியது போல் பல விதமான தனிமங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் இப்படி உருவாக்கப்பட்ட தனிமங்கள் சுற்றி இருக்கும் நட்சத்திரத்தில் எடுக்கப்பட்டு அவை தொடர்ச்சியாக இன்னும் புதிய தனிமங்களாக மாற்றப்படுகின்றன. அதனால் கோட்பாட்டு இயற்பியலாளர்களின் கருத்துப் படி **Rubidium, Lithium, Molybdenum** எனும் தனிமங்கள் உருவாக்கப்படுமெனக் கூறுகின்றார்கள்.

இவ்வளவு காலமும் இது நிரூபிக்கப் படாமலே இருந்தது. ஆனால் விஞ்ஞானிகள் **Magellanic** மேகங்களென அழைக்கப்படும் குறுமீன் பேரடையில் கண்டுபிடித்த ஒரு நட்சத்திரத்திற்குள் இருக்கும் நட்சத்திரத்தில் இந்த அனைத்துப் பண்புகளையும் கண்டுபிடித்தன. இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் நமது பிரபஞ்சத்தில் எவ்வாறு தனிமங்கள் உருவாக்கப்படுகின்றன என்பதை அறிந்துகொள்வது மட்டுமில்லாமல், அதனைச் சரிவரப் புரிந்துகொண்டால் நாம் எப்படி உருவாக்கப்பட்டோம் என்பதையும் அறிந்துகொள்ள இயலும் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். இது மிகவும் சுவாரசியமாக இல்லையா?

சரி நண்பர்களே, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் [**www.facebook.com/scinirosh**]

**Dr.நிரோஷன் தில்லைநாதன்**






Jaffna Bazar
Jaffna Bazar
2020 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுகள்!
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# தோல்லியல் ஆய்வுகளின் வலிமை



**உண்மை தேடி உயிராகும்
உலக வலம்
தொல்லியல் ஆய்வுகளின் வலிமை**

சங்ககால பண்பாட்டு ஆய்வுகள், வரலாற்று திருப்புமுனை செய்யக்கூடிய பகுப்பாய்வு ஆராய்ச்சி ஆவணங்கள் சான்றுகள் மூலம்,மனிதகுலத்தின் தோற்ற அறிவை வலுவாக்கும்முயற்சிகள் தேடப்பட வேண்டியவை. கி.மு 6ம் நூற்றாண்டு முன்னரே தமிழ்சமுதாயம் எழுத்தறிவு பெற்ற சமுதாயமாக விளங்கியது என்பதற்கு சிந்துவெளி தமிழ் பிராமி எழுத்துகள் ஆதாரமாக உள்ளன. சங்ககாலத்தின் கால நிர்ணயத்தை பிரமி எழுத்துக்கள் பிரமூட்டும் வகையில் படம்போட்டு காட்டுகிறது. உலகின் தொன்மையான நாகரிகம் என ஐரோப்பிய உலகம் கருதும் கிரேக்க சமூகத்துடன் குறிப்பாக ரோம் நகருடன் தமிழ் நாகரிகம் கொண்டிருந்த தொடர்பை பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**கிரி நாகா – கனடா**





ஆயினும் மனிதகுல எழுத்தறிவு, எழுதிவைத்த வரலாற்றை சீரமைக்க சிந்திக்க விரைகிறது. உண்மைகளை தோண்டியெடுத்து மனித குலத்தின் சிந்தனையை தூண்டிவிட்டுஆவண சேர்ப்புடன் அடுத்த கட்ட தேடலை நோக்கி நகர்கிறது. தொல்லியல் ஆய்வுகள். நாம் இதுதான் வரலாறு என்று நம்பும் ஒன்றை புதிய கண்டுபிடிப்புகள் மறுபரிசீலனை செய்ய வைத்துவிடும். எழுதிவைத்த வரலாற்றை எதிர்பார்க்காத காலத்தை நோக்கி நகர்த்திவிடும். சிலநேரம் நாம் இதுதான் வரலாறு என்று நம்பிக்கொண்டிருக்கும் ஒன்றை புரட்டி போட்டுவிடும். அகழ்வாராச்சி, தொல்லியல்துறை, போன்றவற்றால் கீழடி தமிழர்களிடம் ஆழமாகப் பதிந்துள்ள ஒரு இடமாக உள்ளது. உலகத் தமிழர்களால் இவ்விடம் அதிகளவு பேசப்பட்டு வருகிறது. கீழடி வைகை நதி அண்மித்து, சிவகங்கை மாவட்டத்துக்கு



உட்பட்ட மதுரையில் இருந்து தென்கிழக்காக 14km தூரத்தில் அமைந்துள்ளது.

இந்திய தொல்லியல்துறை, தமிழக தொல்லியல்துறை ஆகியவையால் கீழடி அகழாய்வு நடத்தப்பட்டு வருகிறது. தமிழ் இலக்கியத்தின் முகவரி தேடுவோர்க்கு, வைகை நதி பரவும், சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம்,தேனீ,திண்டுக்கல் என 5 மாவட்டங்கள் ஊடாக கடலில் கலக்கும் அழகர்குளம் வரை ஆய்வுகள் நடைபெறுகின்றன.

2013இல்தொல்லியல்துறைஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணர், மற்றும் 2 உதவி தொல்லிய லாளார்கள்,6ஆய்வு மாணவர்கள் கொண்ட ஒரு சிறிய ஆய்வு குழு மிகபெரிய அளவில் அகழ்வாராய்ச்சியின் அறிக்கை முறைமைக்கு வழிவகுத்தது.

வைகை சார்ந்த அகழாய்வின் தேடுதல்கள் தமிழ் நாகரிகத்தை கொண்டாடப்படும் ஒன்றாக அமைந்துள்ளது.

கட்டுமானம், நெசவுத்துறை, உலோக பயன்பாடு, தங்க அணிகலன்கள், செப்பு பொருட்கள், இரும்பு கருவிகள், செங்கல் கட்டுமானங்கள், சுடுமண் உறை கிணறுகள், மழை நீர்வடி கூரை ஓடுகள், கண்ணாடி, தூதுபவளம், சுடுமண் காதணிகள், கறுப்பு சிவப்பு மண்பாண்டங்கள் போன்ற ஆதார ஆவணங்கள், தமிழ் சமுதாயம், பொழுதுபோக்கு பாண்டி தாயம் போன்ற விளையாட்டுகளும், ஆபரண அலங்கார செல்வ செழிப்பும் கொண்ட மகிழ்ச்சியான வாழ்கை முறையை கொண்டிருந்ததை வெளிப்படுத்துகின்றது.

இதுபோன்ற ஆய்வுகளும், உலகின் மற்றைய சமுதாயங்களின் ஆவணங்களும், பலசமுதாயங்கள் எப்படி தொடர்புபட்டு மனிதகுலத்தின் ஒற்றுமை மேம்பாட்டை மெருகூட்டின என்பதை ஆய்வதில் மனிதகுலம் மேம்படும். மகிழ்ச்சியாய் வாழும் வழிவகைகளை தேடும். தமிழினம் தொன்மையான நாகரீகம் கொண்ட இனம் என்பதனை கீழடி ஆய்வுகள் சொல்வது தமிழர் என்பதற்காக மட்டும் மகிழவில்லை. கி.மு.6ம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்த மனிதகுலத்தின் பேராற்றல் ஆச்சரியப்படத்தக்கது. அந்த ஆச்சரியத்தின் ஊற்றில் பிறந்த மகிழ்ச்சியே நமது என்பது உண்மை.



**கீழடி அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருள்களின் கண்காட்சி அரங்கில் வைக்கப்பட்டுள்ள எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்**



# நோர்வேயில் முதியவர்களுக்கென ஒரு குட்டிக்கிராமம்





கவிதா லக்ஷ்மி
நோர்வே

மறதிநோய் உள்ளவர்களுக்கான பராமரிப்புக்காக நோர்வேயில் ஒரு குட்டி ஊரையே கட்டியுள்ளார்கள். இதை கிராமம் என்றே அழைக்கின்றனர் (Demens landsby). மனிதர்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு மீறிய அதிகமான வசதிகளுடன் இக்கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

முதியவர்களுக்கான தனிநபர் அறையில் இருந்து அவர்களுக்கான சமையல் அறைவரை அதன் வடிவமைப்பே மிக அலாதியானது. அவர்களுடைய வீட்டின் வாசம் இருக்க வேண்டி அந்தக் காலத்து தளபாடங்கள் தொடக்கம் சுவர்களில் நிறங்களின் தேர்வுகள் வரை கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கலைநிகழ்வுகளுக்கான வசதி, கடை, பழத்தோட்டம், பயிர்செய்யும் கண்ணாடி வீடு, கோழிவளர்ப்பு, ஏழாயிரத்துக்கும் மேலான மரச்செடிகள், குளம், சலூன், மரவேலை செய்யுமிடம், தைக்குமிடம், அழகுநிலையம், படம் வரைதலுக்கான அறை, உடற்பயிற்சிக்கான வசதி என்று பல இருந்தாலும் இத்தனை இடங்களும் இவர்களுக்கானது மட்டுமல்ல, வெளியே உள்ள மனிதர்களும் இவைகளை அவர்களோடு சேர்ந்து பாவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடே அனைத்தும் உருவாக்கப்பட்டுள்ளன.

முதியவர்களின் குடும்பங்கள் இவர்களோடு சேர்ந்து சமைக்கவோ, கதை பேசவோ, படம் பார்க்கவோ, உடற்பயிற்சி செய்யவோ முடியும். தாம் வாழ்ந்த ஊர்களின் பாதைகளையோ தாம் விரும்பிய ஊர்களின் காட்சிகளையோ அவர்கள் திரையில் பார்த்தவண்ணம் உடற்பயிற்சி செய்யலாம்.

இளைஞர்களுக்காக சில இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் அவர்கள் சுவர் ஏறுதல் போன்ற விடயங்களை முதியவர்கள் பார்த்து ரசிப்பதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளன.

வெளி உலகிற்கும் முதியவர்களுக்குமான தொடர்பு குழந்தைகள் வரை இருக்க வேண்டி பாலர்வகுப்புகளில் இருந்து வரும் குழந்தைகளையும் கவரக்கூடிய விடயங்கள் பல சேர்க்கப்பட்டதுமல்லாமல், தமது தனியறைகளில் இருந்து கண்ணாடி விழியாகப் பார்த்து மகிழும்படி பாலர்வகுப்பு ஒன்றினையும் சுற்றாடலில் ஏற்படுத்தி இருக்கின்றனர்.

இறங்கி நடக்கும் தோட்டப் பாதைகளில் பலவிதமான கற்களும் மரத்துண்டுகளும் பதிக்கப்பட்ட பகுதி ஒன்றும் இருக்கின்றது. அதில் நடக்கும் போது அவை காலில் வேறுபட்ட உணர்வுகளைக் கொடுக்ககூடியது. முதியவர்களது புலன்களைத் தூண்டும் அறை ஒன்றும் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

மேற்கூறிய விடயங்களைவிட இன்னும் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன.

இத்தனையும் மனமறதி உள்ள [அதாவது எமது மொழியிற் சொல்வதானால் அறலைபிறழ்ந்த] மனிதர்களுக்காக அமைக்கப்பட்ட முதல் கிராமம் இதுதான். இக் கிராமம் நான் வாழும் ஊரில் கட்டப்பட்டிருப்பது மகிழ்ச்சியே. வயதானால் என்ன மறதி வந்தால் என்ன, இதுவும் நன்றாகத்தானே இருக்கிறது என்று தோன்றினாலும் பேரக் குழந்தைகளோடு ஒரே வீட்டில் இருப்பது வேறுதான். இந்த அவசர உலகில் யாருக்கும் பாரமாகாமல் இருப்பதும் நல்லதுதான்.

இதன் திறப்புவிழா இந்த மாதம் செப்டெம்பர் 21ஆம் திகதி, நாட்டின் பிரதமராலும், கலாச்சார அமைச்சராலும் திறந்துவைக்கப்பட இருக்கிறது.



எமது நாட்டில், என்ன தேர்தல் வைத்து யாருக்கு ஓட்டுப்போட்டென்ன? என்ன நடந்துவிடப்போகிறது? எனது தேசத்தில் நான் கண்ட முதியவர்கள் நினைவில் வரும் போதெல்லாம் ஒரு ஓரத்தில் வலி இருக்கத்தான் செய்கிறது. மனிதத்தையும், ஒழுங்கையும், சமூகத்திற்கான செயற்பாடுகளையும் நாங்கள் இழந்து பலகாலமாயிற்று.






03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ராஜபக்ஷக்கள் அரசியலமைப்பில் செய்யப்போகும் மாற்றம்?

ஒன்று – ஜனாதிபதியின் பதவிக் காலம் இரண்டு தவணைகள் என்றிருப்பதை மாற்ற வேண்டாம் என அவர் கூறியிருக்கின்றார். இதனைவிட, சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்களைக் குறைக்கக்கூடாது என்பதும் அவரது பரிந்துரைகளில் முக்கியமானது. ஆக, மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு அங்கு தடைபோப்பட்டுள்ளது.

19 மஹிந்தவுக்கு அதிருப்தியைக் கொடுத்தமைக்கு இந்த இரண்டும்தான் காரணமாக இருந்தன.

ஜனாதிபதியின் பரிந்துரையின்படி இந்த இரண்டிலும் கைவைப்பதில்லை என இப்போது தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

அரசியலமைப்பு மாற்றத்தில் என்ன செய்யப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி சொல்லவில்லை. என்ன செய்யக்கூடாது என்பதைத்தான் அவர் அடித்துக் கூறியிருக்கின்றார். இந்தப் பின்னணியில்தான் 19 குறித்து அரச



தரப்பில் குழப்பங்கள் உருவாகியிருக்கின்றது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்லத் தொடங்கியுள்ளார்கள். 19 ஆவது திருத்தம் ராஜபக்ஷக்களுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று – சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டது. இரண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ராஜபக்ஷ குடும்பத்தில் நால்வரை [மஹிந்த, கோட்டாபய, பஸில், நாமல்] இலக்கு வைத்துக் கொண்டுவரப்பட்ட சரத்துக்கள். அதில் ஒன்றை கோட்டாபய தாண்டிவிட்டார். ஜனாதிபதியுமாகிவிட்டார். அடுத்த தடவையும் ஜனாதிபதியாகும் நோக்கம் அவருக்கு இருப்பதாகவே தெரிகின்றது.

19 ஆவது திருத்தம் ராஜபக்ஷக்களை இலக்கு வைத்து அவசரமாகக் கொண்டுவரப்பட்ட ஒன்றாக இருந்தாலும், பல ஆரோக்கியமான அம்சங்களும் அதில் பொதிந்திருந்தன. குறிப்பாக, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்தது, தகவல் அறியும் சுதந்திரம் குறித்த சட்டமூலம் போன்றன ஆரோக்கியமான விடயங்கள். அவற்றை மாற்றியமைக்க முற்பட்டால் கடுமையான விமர்சனங்கள் உருவாகும். அப்படியானால், இரட்டைப் பிரஜாவுரிமை குறித்த அம்சம் மட்டும் மாற்றப்படலாம். அதன் மூலம் பசில் ராஜபக்ஷ தேசியப்பட்டியல் எம்.பி.யாக்கப்பட்டு முக்கிய அமைச்சர் பதவி ஒன்று அவருக்குக் கொடுக்கப்படலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புக்களும், அவற்றுக்கான திருத்தங்களும் தனிப்பட்ட நலன்களையும், கட்சி நலன்களையும் அடிப்படையாகக் கொண்டவையாகவே இருந்துள்ளன. அந்த வகையில் இப்போது மூன்றில் இரண்டு என்ற இராட்சச பலத்துடன் ஆட்சியை அமைத்துள்ள ராஜபக்ஷக்கள் தமக்கேற்ற விதமாக தமது ஆட்சி தொடரத் தக்க வகையில் அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கு நிச்சயமாக முற்படுவார்கள். அதில், தேசிய இன நெருக்கடிக்கான தீர்வை அவர்கள் தருவார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல.

---

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நிழலும் நிழலும் தீண்டுவதற்கும் வெளிச்சம் வேண்டும்

*கருவி பல , பாணன் ஒருவன்*
*தோற்றம் பல , சக்தி ஒன்று.*
*அது வாழ்க !*

எல்லா உயிர்களும் சமம் என்று எண்ணினால் , முரண்பாடுகளை தவிர்த்த வசந்த வாழ்க்கையை அனுபவிக்கலாம். ஏதோ பாம்பு பிடாரனின் குழல் பற்றி சொல்லும் கவிதை என்று மேலோட்டமாகப் பார்த்து விட்டு சென்றால், அக்கவியில் மறை பொருளாய் பொதிந்துள்ள உண்மை விளக்கம் கிட்டாது. இப்படித் தான் பல சமயங்களில் எம் அறியாமை தலைக்கு மேல் நின்று தாண்டவம் ஆடும் போது எல்லாவற்றையும் மேலோட்டமாக கண்டு உணர்ச்சிவசப்பட்டு விடுகிறோம். அதன் விளைவு எமது உடலுக்கும் உள்ளத்திற்கும் எப்பேர்ப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று ஒரு பொழுதும் கவனிக்கவும் மாட்டோம். இந்த உடல் உள கவனத்தை இலகுவில் ஏற்படுத்தி தரவல்ல அரும் சாதனம் கலைகள். கலைஞனின் அழகியல் உலகம் என்பது வினோத சித்திரம். விபரிக்க விபரிக்க முடிவிலியாய் தோன்றும் விந்தை வீட்டுக்கொரு கலைஞன் இருந்தால் வீடுபேறுக்கு வழியுண்டு. கலையெனும் காற்றை மூச்சாக்கி சக்தி கொள்வோம். சக்தியின் லீலைக்குள் மீண்டும் சரணடைவோம்.

---

12 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வெயிலிலுக்குள் சென்றால் கறுத்து விடுவோம் என ஓடி ஒளிகிறோம்!

சக்தியே குளிர்காலத்தில் உதவிபுரியும். இன்றைய கணிப்பில் பத்திற்கு ஏழு நபர்கள் சூரிய வெப்ப ஒளிசக்தி பற்றாக்குறையால் நோயுறுகின்றனர். இந்த ஆய்வின்படி போதிய வெப்பமான நாடான இந்தியாவிலும் வைட்டமின் டி பற்றாக்குறையானவர்களே அதிகம். இளவெயிலில் உலவ மறப்பவர்களை இவை இலகுவில் தாக்குகின்றன.

முக்கிய குறிப்பாக வெள்ளையர்களுக்கு தினமும் இருபது நிமிடங்கள் சூரிய ஒளி போதுமானது. குளிர் காலங்களில் ஒரு மணி நேரம் தேவை. மாநிறம் மற்றும் கருமை நிறம் கொண்டவர்களுக்கு கோடை காலத்தில் ஒரு மணி நேரமும், குளிர் காலத்தில் இரண்டு மணி நேரமும் நேரடியான சூரிய ஒளி தேவைப்படுகிறது.


இந்த வேறுபாட்டிற்கு காரணம் கருமை நிறமான தோல் அதிக சூரிய வெப்ப வலயங்களில் உள்ளபோது கடும் வெயிலின் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான மெலனின் மேலடுக்குகளால் ஆனது. எனவே அதனால் ஒளிசக்தியை கிரகிப்பதற்கு தாமதமாகிறது.நண்பகலில் கடும் வெயிலில் உலவும் போது தலைக்கு நேரடியாக வெயில் தாக்குவதை தவிர்க்க வேண்டும். அந்நேரங்களில் அதிக குளுக்கோஸ் மற்றும் நீரிழப்பு ஏற்படுவதால் அடிக்கடி இயற்கையான பானங்கள் அருந்த வேண்டும். குளுக்கோஸ் இழப்பை சூரிய வெப்பம் செய்வதால் நீரிழிவு நோயாளர்கள் தகுந்த பாதுகாப்புடன் சூரிய ஒளியில் நன்கு உலவுவது நலம் தரும். காலையில் சூரிய உதயம் தொடங்கி பத்து மணிவரை நேரடியாக உடலில் வெயில் படும்படி உலாவலாம். மாலை மூன்றரை மணிக்கு பின்னர் வெயிலில் உலாவலாம். சூடு அற்ற மிகவும் இளம் காலை உதய சூரியனை சில நிமிடங்கள் கண்களால் நேரடியாக பார்த்து வருவதன் மூலம் கண்கள் மிக்க ஆற்றல் பெறும் எனவும், காலை சூரியன் அறிவு மற்றும் ஆற்றலையும், மாலைச் சூரியன் அழகினையும் சேர்க்கும் எனவும் கூறுவார்கள்.

வெயிலில் சென்றால் கறுத்து விடுவோம் என ஓடி ஒளியாது உள் உறுப்புகள் எல்லாம் சிறந்து விளங்க வேண்டுமென சிந்தித்து செயற்பட வேண்டும். வெயிலில் உங்கள் நேரம் செலவிடப்படவில்லை எனில். உங்களை பராமரிப்பதற்கு இன்னொருவருக்கு உங்கள் மூலதனம் அனைத்தையும் செலவிட வேண்டியிருக்கும்.

**ஞாயிறே நலமே வாழ்க!**


டோட்மூண்ட் நகரில் பலசரக்குக் கடை ஒன்றிற்கு பகுதி நேர வேலைக்கு ஒரு பெண் ஊழியர் தேவை.

தொடர்புகளுக்கு:
049 152 18115862



புத்தகங்கள் யாவும் இலவசம்!!!

யேர்மனி – டோட்மூண்ட் நகரில்
வெற்றிமணி வழங்கும் புத்தகப் பந்தல்




01.09.2020 முதல் 19.09.2020 வரை
தண்ணீர்ப் பந்தல் அல்ல!! இது புத்தகப் பந்தல்
தமிழ், ஆங்கிலம், யேர்மன் மொழிகளில் வெளிவந்த பயனுள்ள புத்தகங்கள்
(குறிப்பிட்ட அளவு)
யாழ்ப்பாண நாட்டிய மரபு (சின்னமேளமும் அதன் வளர்ச்சியும் )
அதிசய உலா,பொன்னும் மணியும்,மரம் மாந்தர் மிருகம் இன்னும் பல...
அன்புடன் அழைக்கின்றோம்.
வெற்றிமணி: யேர்மனி | இங்கிலாந்து
இடம்: BCN TRAVELS Rheinische Str.72 44137 Dortmund

21 Page Continu...

## Keys to Unlock Yourself

change the past. If anything which make you feel stuck, do not need to worry, just take responsibility, learn from them, and forgive yourself. It will bring you wisdom, presence, creativity, compassion, and love, and it end up doing what's best for the good of everything.

Do not forget to remember the gifts you were born with. When you stop to remember what you have instead of worrying about what you don't have or may not be getting it changes your perspective for the better.

It is time, be ready to see the world in a nice perspective. Enjoy each day. You can't always be in blisscity. But look for those little bright moments that happen all the time and that we often fail to identify.

Make a reminder to see some good in every day, and you will change your life. Changing your life for the better is about picking a destination and taking one step at a time to get there. Being thoughtful about making improvements is a great start. Now put it into action.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

சூழலிலுள்ள பிள்ளைகள் பெற்றோர்களை வெறுக்கின்றார்கள். ஆனால் வழியின்றி

அடக்கு முறைக்கு அடங்கிப் போகின்றார்கள். பின்னர் தருணம் பார்த்து குடும்ப அமைப்பை உடைத்தெறிந்து விலகி ஓடத் தயாராக இருக்கின்றார்கள். சிலவேளைகளில் பிள்ளை வளர்ப்பில் வன்முறையை பாவிக்கும் பெற்றோர் தாம் வளர்ந்த முறை அது என்பதால் பிள்ளை ஒழுங்காக வளர அது உதவும் என நம்புகிறார்கள். ஆனால் தமது கோபத்தால் ஏற்பட்ட மன வலியின் பிரதிபலிப்புதான் அது என அவர்கள் உணர்வதில்லை. இதற்குக் கோபம் வருவது பிழையல்ல. நியாயமான கோபம் குழந்தைகளுக்கு கூட வரலாம் என்ற விளக்கமும், அதை எப்படி யாரும் ஏற்கக்கூடிய விதத்தில், மனம் புண்படாத வழியில், வெளிப்படுத்தலாம் என்ற அறிவும் தேவை. தேகப்பியாசம் செய்தல், காலாற நடத்தல், சிநேகிதருடன் மனம் விட்டு கதைத்தல், உணரும் உணர்ச்சிகளை ஒரு கடதாசியில் எழுதல் என்பன அந்த நேரக் கோபத்துக்கு ஒரு ஆறுதலைப் பெற உதவலாம். பின்னர் பாதித்த நிகழ்வு அல்லது செயற்பாடு பற்றி குற்றம் கூறும் தொனியில் கதையாமல் அது குறிப்பிட்டவரை, குறிப்பிட்ட உறவைப் பாதிக்காமல் இருப்பதற்கான முயற்சி என்ற தொனியில் சம்பந்தப்பட்டவருடன் மனம் விட்டுக் கதைப்பது அவசியம்.

அவ்வகையில் கதைக்க முடியாத நிலைக்கு குறித்த உறவிலுள்ள இருவரும் வந்தால் கவுன்சலிங் மிகவும் உதவி செய்யும். அல்லது வடிகால் தேடும் வேறு உறவுகளின் சேர்க்கை அல்லது தற்கொலை, கொலை என வேறு பல தரப்பட்ட அழிவுகளில் போய் முடியக் கூடும், அல்லது போதைப்பொருள், மது, குழு வன்முறை என




தம்மைத் தாமே அழிக்கும் துர்ப்பாக்கிய நிலையைக் கொண்டு வரலாம்.

எனவே குடும்பத்தில் உள்ள ஒருவரின் கோபம் குடும்பத்தில் ஏதோ ஒரு வகையில் அழிவை அல்லது சூழ இருப்போரில் குழப்பத்தை உள்ளாக்கினால் அதற்கென பயிற்சி பெற்றவர்களின் உதவியை நாடுவது அவசியம்.

அதற்காக பெண்கள் அதீத கோபம் கொண்டு வன்முறையில் ஈடுபடுவது இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் ஒப்பீட்டளவில் குறைவு என்றே சொல்ல வேண்டும். எங்கள் சமுதாயத்திலேயே நடக்கும் பல விபரீதங்கள் அனைவருக்கும் தெரிந்ததுதான். பிரச்சினை இல்லாதவர் என யாருமில்லை. அதை எப்படிக் கையாளுவது என்பதும் கையாள முடியாவிட்டால் அதிலிருந்து எப்படி மீள்வது என்பதும் தான் முக்கியம்.

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...




அத்துடன் மனம் மகிழ்ச்சியாக இருப்பதாலும் வெற்றுப் பொழுதுகள் இல்லாததாலும் இனிப்பை நாட வேண்டிய அவசியம் ஏற்படாது. மனம் மகிழ்சியாக இருப்பது அவசியம். மறை சிந்தனைகளில் மூழ்காதீர்கள். தேவையற்ற உணர்வுச் சிக்கலகளில் மூழ்க வேண்டாம். மகிழ்சிசான பொழுதுபோக்குளில் ஈடுபடுங்கள்.

மனஅழுத்தம் இருந்தால் அதை மறக்க பலர் மதுவை நாடுகிறார்கள். உங்களைப் போன்ற இனிப்பிற்கு அடிமையானவர்கள் இனிப்பையே நாடுவார்கள். எனவே மனஅழுத்தத்தை தூண்டும் விடயங்களில் ஈடுபடாதீர்கள். உடற் பயிற்சி, நடைப் பயிற்சி, தியானம், யோகாசனம், மந்திர உச்சாடனம் போன்ற ஏதாவது செயற்பாட்டில் ஈடுபடுவதும் நன்மை தரும். அதே போல போதிய உறக்கமும் அவசியம்.

இக் கட்டுரையைப் படித்து முடித்து விட்டு சும்மா இருக்காதீர்கள். உடனடியாக எழுந்து உங்கள் வீட்டிலுள்ள சொக்லேட், ஐஸ்கிறீம் முதற்கொண்டு எல்லா இனிப்புகளையும் குப்பைக் கூடையில் வீசுவதிலிருந்து உங்கள் முயற்சியை ஆரம்பியுங்கள். இனிப்பிலிருந்து விடுதலை நிச்சயம். **நன்றி: ஹாய் நலமா?**

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அமெரிக்கத் துணை ஜனாதிபதி எங்கட கமலா அக்காவோ?

சீனி இல்லையே என்று கேட்டால் எங்க என்னை மொக்கன் என்று யோசித்து விடுவாரோ என்ற பயத்தில், தேத்தண்ணியாவது வாங்கித் தந்தாரே என்று யோசித்து விட்டு, சீனியில்லாத கச்சல் தேத்தண்ணியை கைக்க கைக்க குடிச்சுக் கொண்டிருக்க, வெளில டைப ஆயவஉடக்கு அடிக்கும் பப்பரே சத்தமும் பைலா பாட்டும் கேட்குது.

அரைவாசி குடிச்ச தேத்தண்ணியை அப்படியே வச்சிட்டு, தேத்தண்ணிக் கடையால வெளியே ஓடிவர, வாங்கோண்ணா... வாங்கோண்ணா.. வேலை வேணுமாண்ணா வேணுமாண்ணா என்று இளம் பெடியள் ஆடிக்கொண்டே கூப்பிடுறாங்கள்.

ஆளுக்கொரு வேலை, ஆனையிறவில் ஒரு **resort**, அத்தியடியில் ஒரு **car park**, அலுவல் முடிஞ்சுது.. எலகிரி அண்ணே என்று ஆண்டாண்டு கால எங்கட பிரச்சினையை தீர்க்க அவங்கள் டக் டிக் டோஸ் என்று **plan**ஐ சொல்லுறாங்கள்.

வாற நவம்பரில் உங்கட ஆள் வென்று, தை மாதம் நீங்க பதவியேற்றாப் பேந்து, எங்கட ஆக்களை உங்க அனுப்பி, உங்களைச் சந்தித்து, உங்களுக்கு ஒரு பொன்னாடை போர்த்தலாம் என்றால், இந்த நாலு கோஷ்டியில் எந்தக் கோஷ்டியை அனுப்புவது என்று யோசிச்சா நமக்கே மண்டை வெடிக்குது, கமலாக்கா.

தப்பித் தவறி, இந்தியாக்கோ சைனாக்கோ போற வழியில், கட்டுநாயக்காவில் நீங்க தங்குற, அஞ்சு நிமிஷத்தில, எங்கட ஆக்களில் ஆரை சந்திப்பியல் என்றதை முடிவெடுக்க, உங்கட ஆனானப்பட்ட இராஜாங்க திணைக்களமே திணறப் போகுதென்றால் பாருங்கோவன் எங்கட திறத்தை.

கமலாக்கா, இதுக்கு மேலயும் எழுதி உங்களுக்கு அலுப்புத் தர விரும்பேல்ல.. கடைசிய ஒன்றை சொல்லிட்டு போறன்..

நீங்க பதவியேற்கும் போது, ஒரு வார்த்தை.. ஒரே வார்த்தை தமிழில் சொல்லிட்டியல் என்றா காணுமக்கா.. நாங்க அதை வச்சே.. நீங்க வருவியல்.. ஏதாவது செய்வியல் என்று நம்பி நம்பியே அடுத்த அஞ்சு வரியத்தை ஓட்டிடுவம்..

ஏனென்றா அக்கா, எங்களுக்கு மிஞ்சியிருப்பது எங்களுக்கு எப்பவாவது ஒருநாள் விடிவு கிடைக்கும் என்ற ஏதோவொரு முரட்டுத் தனமான நம்பிக்கை மட்டுமே.

அந்த நம்பிக்கையை எந்த கொப்பனோ, சுப்பனோ, கோத்தாவோ ஏன் அவன்ட ஆத்தாவோ வந்தாலும் எங்களிடம் இருந்து பறிக்கேலாது, கமலாக்கா...

ஏலுமென்றா பண்ணிப் பார்க்க சொல்லுங்கோக்கா..

நன்றி வணக்கமக்கா. ஜூட் பிரகாஷ்– **Jude Prakash** மெல்போர்ண்.








வெற்றிமைந்தன்

### தில்லுமுல்லு

**1981** ஆம் ஆண்டு வெளியான படங்களில் ஒரு படம் இந்தித் திரையுலகை அசைத்தது. அது தான் ஏக் துஜே கேலியே.

தமிழில் வெளியான இரண்டு படங்களில் ஒன்று நகைச்சுவையில் கொடிகட்டிப் பறந்தது. ரஜினிகாந்த் நடித்த தில்லு முல்லு தான் அந்தப் படம்.




இந்தியில் 1979ம் ஆண்டு வெளியான கோல்மால் திரைப்படத்தின் ரீமேக் தான் தமிழில் தில்லு முல்லு. ரஜினிகாந்துடன் ஜோடியாக மாதவி நடித்திருந்தார். இந்தப் படத்தில் தேங்காய் சீனிவாசனின் கதாபாத்திரம் மிகவும் ரசிக்கப்பட்டது. இவர்களைத் தவிர நாகேஷ், சௌகார் ஜானகி, பூர்ணம் விஸ்வநாதன் மற்றும் பலர் நடித்திருந்தார்கள்.

தேங்காய் சீனிவாசனை ஏமாற்ற காந்தியவாதி, நல்ல குணமுடையவன், விளையாட்டையே வெறுப்பவன் என சொல்லி வேலையில் சேரும் ரஜினி உண்மை வெளிப்படும் போது, தப்பிப்பதற்காக தனக்கு ஒரு தம்பி உண்டு அவனுக்கு மீசை இல்லை என்கிறான். அந்த பொய்யை காப்பாற்றுவதற்காக அவன் செய்யும் தில்லு முல்லுகள் தான் படம்.

முரட்டுத் தனமான கதாபாத்திரங்கள், வில்லத்தனமான கதாபாத்திரங்கள், ஆக்ஷன் நிறைந்த கதாபாத்திரங்கள் இவை தான் தில்லு முல்லு வரும் வரை ரஜினிகாந்த் செய்து வந்த கதாபாத்திரங்கள். ரஜினிக்கு நகைச்சுவை வரும் என கணித்து அதை நிரூபித்துக் காட்டியதில் பாலசந்தரின் திறமை அலாதியானது.

தில்லு முல்லு சூப்பர் ஹிட். வசூலில் கொடி நாட்டிய படம். அய்யம்பேட்டை அறிவுடை நம்பி கலியபெருமாள் சந்திரன், அய்யம்பேட்டை அறிவுடை நம்பி கலியபெருமாள் இந்திரன் என கதாபாத்திரங்களின் பெயர்கள் ஹிட் வரிசையில் இருக்கின்றன.

இந்தப் படத்தை இயக்கியது பாலசந்தராக இருந்தாலும் வசனம் எழுதியது விசு ! ரஜினிகாந்த் மீசையில்லாமல் நடித்த முதல் படம் இது எனும் சுவாரஸ்யப் பெயரும் இந்தப் படத்துக்கு உண்டு.

ராகங்கள் பதினாறு, தில்லு முல்லு தில்லு முல்லு போன்ற பிரபலமான பாடல்களைக் கண்ணதாசன் எழுத எம்.எஸ்.வி இசையமைத்திருந்தார். 2013ம் ஆண்டு இந்தப் படம் சிவா, பிரகாஷ்ராஜ் நடிக்க பத்ரியின் இயக்கத்தில் வெளிவந்தது. அதுவும் சுமாரான வெற்றியைப் பெற்றது.

ரஜினிகாந்தின் டாப் திரைப்படங்களில் தில்லுமுல்லுவுக்கு நிரந்தர இடம் உண்டு. டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகை ரஜினி படங்களில் தில்லு முல்லுவுக்குக் கொடுத்திருப்பது ஏழாவது இடம் !

இந்தப் படத்திலிருந்து அப்படியே ஒரு யூ டர்ன் அடித்து பாலசந்தர் இயக்கிய படம் தண்ணீர் தண்ணீர். அப்படி ஒரு சீரியஸ் படம்.



### தண்ணீர் தண்ணீர்

தண்ணீர் தண்ணீர் படத்தைக் கொண்டாடாத விமர்சகர்களே இல்லை எனலாம். தமிழகத்தின் ஓரமாக இருக்கும் ஒரு கிராமத்தின் தண்ணீர் பஞ்சமும், அதில் புகுந்து விளையாடும் அரசியலும் தான் கதையின் மையம். சரிதாவின் அட்டகாசமான நடிப்பில் காண்போரையெல்லாம் கண்கலங்க வைக்கும் படமாக தண்ணீர் தண்ணீர் உருவாகியிருந்தது.



கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது போல, இந்தப் படத்துக்கு திரையிட்ட இடமெல்லாம் வரவேற்பு. பல சர்வதேசத் திரைப்பட விழாக்களில் இந்தப் படம் பாராட்டப்பட்டது. கோமள் சுவாமிநாதனின் நாடகத்தின் கதையை மையமாக வைத்துக் கொண்டு திரைக்கதையை பாலசந்தர் எழுதியிருந்தார். ராதாரவி, சார்லி, ஷண்முகம், வீரசுவாமி ஆகியோர் நடித்திருந்தனர்.

சிறந்த திரைப்படத்துக்கான தேசிய விருது, சிறந்த திரைக்கதைக்கான தேசிய விருது, சிறந்த திரைப்படத்துக்கான பிலிம் ஃபேர் விருது, சிறந்த இயக்குனருக்கான பிலிம் ஃபேர் விருது, சிறந்த திரைப்படத்துக்கான சினிமா எக்ஸ்ப்ரஸ் விருது என இந்தப் படம் பல்வேறு விருதுகளை அள்ளிக் குவித்தது. கே.பாலசந்தர் படங்களில் மிக முக்கியமான பதிவு இந்தத் தண்ணீர் தண்ணீர்.

அதே ஆண்டு எங்க ஊர் கண்ணகி என்றொரு படத்தை சரிதா, சீமா, மாதவி ஆகியோரை முக்கியக் கதாபாத்திரங்களாகக் கொண்டு பாலசந்தர் எடுத்தார். ஆனால் வணிக ரீதியாக அந்தப் படம் வெற்றியடையவில்லை

அதே போல 47 நாட்கள் என்றொரு படத்தையும் கே.பாலசந்தர் அந்த ஆண்டு இயக்கினார்.

30 ஆம் பக்கம் பார்க்க...








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...



ஜெயப்ரதா, சரத்பாபு, ராமபிரபா ஆகியோருடன் இந்தப் படத்தில் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்தவர் சிரஞ்சீவி.

சிரஞ்சீவியின் தமிழ் அறிமுகம் இந்தப் படம் தான் ! அந்த வகையில் இந்தப் படம் கவனிக்கப் பட்டது. சிரஞ்சீவியின் துவக்க காலப் படங்களில் முக்கியமான படம் எனும் பெயரைப் பெற்றது.

அதே ஆண்டு தோலி கொடி கூசிந்தி என்றொரு தெலுங்குப் படத்தை இயக்கி அதற்கு சிறந்த திரைப்படத்துக்கான ஆந்திர அரசின் நந்தி விருதினைப் பெற்றுக் கொண்டார் பாலசந்தர்.

மொத்தத்தில் 1981ம் ஆண்டு பாலசந்தரின் கொடி உச்சத்தில் பறந்த ஆண்டு எனக் கொள்லலாம். ஏக் துஜே கேலியே எனும் சூப்பர் டூப்பர் இந்திப் படம், தில்லு முல்லு எனும் கமர்ஷியல் ஹிட், தண்ணீர் தண்ணீர் எனும் கிளாசிக் ஹிட், கூடவே நாலு தெலுங்கு படங்கள், இரண்டு தமிழ்ப் படங்கள் என அமர்க்களப் படுத்தினார் கே.பாலசந்தர்.

இந்த ஆண்டு பரபரப்பாய் இருந்ததாலோ என்னவோ, அடுத்த ஆண்டு பாலசந்தர் ஒரே ஒரு படத்தை இயக்கினார். அதுவும் வணிக ரீதியாக தோல்விப்படமாக அமைந்தது. அந்தப் படம் அக்னி சாட்சி. சிறந்த நடிகைக்கான தமிழக அரசின் விருது சரிதாவுக்குக் கிடைத்தது மட்டுமே இந்தப் படத்துக்குக் கிடைத்த ஆறுதல். மனநிலை பாதிக்கப்பட்ட ‘ஸ்கிட்ஸோஃபெரினா’ நோயாளியாக அவர் நடித்திருந்தார். சிவகுமார், சரிதா முதன்மைக் கதாபாத்திரங்களாக நடித்த இந்தப் படத்தில் ரஜினிகாந்த், கமலஹாசன் ஆகியோர் கவுரவ வேடமேற்றிருந்தனர்.

அடுத்த ஆண்டும் பாலசந்தரின் தமிழ்ப் படங்கள் பரபரப்பை ஏற்படுத்தவில்லை. பொய்க்கால் குதிரை என்றொரு தமிழ்ப் படத்தை இயக்கினார். அந்தப் படத்தில் கவிஞர் வாலி அறிமுகமாகியிருந்தார். ‘எனக்கு நடிக்கத் தெரியாது’ என வாலி மறுத்தபோது, ‘அதை நான் தான் சொல்லணும்.. ஒழுங்கா நடி’ என பாலசந்தர் நடிக்க வைத்தார்.

கிரேஸி மோகனின், ‘மேரேஜ் மேட் இன் சலூன்’ நாடகத்தின் கதையை




மையமாக வைத்து உருவானது இந்தப் படம். கமலஹாசன் இதில் கவுரவ வேடமேற்றிருந்தார்.

தனது முத்திரையைப் பதிக்கும் முக்கியமான படத்துடன் அடுத்த ஆண்டு களத்தில் குதித்தார் பாலசந்தர். அந்தப் படம் ‘அச்சமில்லை அச்சமில்லை’.

---

# கிழித்தலும் கழித்தலும்

**மு.க.சு.சிவகுமாரன்**

வண்டியில் சுமைகள் அதிகம் என்றால் மாட்டை மாற்ற வேண்டும் அல்லது சுமையைக் குறைக்கவேண்டும். மாட்டை மாற்றும் உத்தேசம் இல்லை. காரணம் என்னோடு பயணித்த மாடு அதற்கு என் வழி நான் சொல்லாமலே புரியும் அளவிற்கு அதற்கு அனுபவம் உண்டு. எனவே வண்டி ஓடவேண்டும் என்றால் சுமையைக் குறைக்க வேண்டும். அதனால் சுமையைக் குறைக்கின்றேன். பழைய கடிதங்கள் இனித்தேவையற்ற அல்லது மேலதிக பிரதிகள் உள்ளன என உறுதியாகத் தெரிந்தவற்றைக் கழிக்கின்றேன். சற்று சுமைகுறைகின்றது. மாடுகள் என்னை நன்றியுடன் திரும்பிப்பார்க்கின்றன.

1981 ஆண்டு முதல் எனக்கு வந்த கடிதங்கள் நான் சேகரித்து பத்திரமாக வைத்திருந்த படங்கள் என நூற்றுக் கணக்கானவற்றை இனங்கண்டு கிழித்துக் கழிக்கின்றேன்.

அம்மாவின் கடிதங்கள் அப்பாவின் கடிதங்கள் சகோதரர் கடிதங்கள் நண்பர்கள் கடிதங்கள் ஆசிரியர் கடிதங்கள் மனைவியின் காதல் கடிதங்கள் என எத்தனை கடிதங்கள் இவற்றில் அடக்கம். மாதிரிக்கு மனதை தேற்ற சிலவற்றை வைத்துக்கொண்டு மற்றவற்றை கிழித்துக் கழிக்கின்றேன். சில கடிதங்களும் படங்களும் எனக்கு மட்டுமே சொர்க்கம். அதன் பரிவும் உணர்வும் என்னால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

அம்மாவின் ஒரு கடிதம் – தெருவைக் கடக்கும்போது இரு புறமும் பார்த்துக் கடக்கவும். 1983 ஆம் ஆண்டு எழுதிய கடிதம் அது. அப்போ எனக்கு வயது 31. அம்மா எனக்கு 10



வயதில் இருந்து என்னைப் பத்திரப்படுத்த எழுதும் வசனம்தான் இது. இது எல்லா அம்மாமாருக்கே உள்ள பொதுவான உணர்வுதான், ஆனால் அந்தக் கடிதம் எனக்கு அம்மா இன்னும் என்னுள் இருப்பதுபோன்ற உணர்வை தந்துகொண்டே இருக்கிறது.

இன்று யார் கடிதம் எழுதுகின்றார்கள்? நெஞ்சில் பதியும்படியான பதிவுகள் இல்லை. சூமில் பலர் சும்மாவந்து போகிறார்கள்.

சிலரது கடிதங்களை இப்போ படிக்கும்போது அது நடிப்பு என்றும், சிலரது கடிதங்களைப் படிக்கும்போது அது எமக்கு நல்லபடிப்பு என்றும் பிரித்துப்பார்க்கத் தோன்றுகிறது. பலரது கடிதங்களில் அன்பின்வாசம் இன்றும் வீசுகின்றது.

அன்று சிறுவர்,சிறுமிகளாக தாயகத்தில் இருந்தவர்கள் எனக்கு எழுதிய கடிதங்களில் நெஞ்சில் பதிந்த ஒன்று. மாமா இங்கு ஒரே சூடு! சூடு!! தப்பாகப் புரிந்துவிடாதீங்கள். நான் வெய்யிலைச் சொல்லவில்லை. வெளியில் நடக்கும் சூட்டையும், செல்லடிகளையும் சொல்கின்றேன். அம்மா காதுக்குள் பஞ்சை வைத்துக் கொண்டு படுக்கிறா. காலையில் எடுக்கமறந்து காது கேட்கவில்லை என்கிறா? எழுதிய சிறுமிக்கு அப்போ வயது பத்து. இப்போ அவதான் இங்கிலாந்தில் எனது வருமானவரிக் கணக்காளர்.

நான் எதனைக் கிழிப்பது எதனைக் கழிப்பது என்று திக்குமுக்காடுகிறேன். ஆறுமாதத்திற்கு நீங்கள் பாவிக்காத எதனையும் அகற்றலாம் என்கிறார்கள் யேர்மனியர். அது சரிதான் ஆனால் நான் அவற்றைப் பொருள் என்று நினைக்கவில்லையே. அவற்றில் சில எனக்கு உயிராக உள்ளதே.

இருந்தும் பலவற்றை கிழித்துக் கழித்துவிட்டேன். கணனியில் சில நேரம் யாவும் அழிந்துவிட்டால் சில மாதங்களின் பின் மனம் அவற்றை மறந்து அவை தேவையில் என்று ஒரு நிலை வந்துவிடும். அப்படி வரும் என்று நம்பி இருக்கின்றேன்.

பி.குறிப்பு. படத்தில் ஒரு [**Envelope**] உறையில் **Kanna** என்று எழுதியுள்ளது அல்லவா! அது எனக்கு யேர்மனியில் கிடைத்த முதற் சம்பளத்தின் [**Envelope**] உறை. என்னைப் போல பலர் இப்படிப் பைத்தியமாக இருப்பர்கள் அவர்களுக்கு இதன் உணர்வு புரியும் என்று எண்ணுகின்றேன்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# எம்.ஜி.ஆரை போல் எஸ்.பி.பி.யையும் மீட்டு வர வேண்டும்!



கூட்டுப்பிரார்த்தனைக்கு பாரதிராஜா அழைப்பு! பாடகர் எஸ்.பி பாலசுப்ரமணியம் உடல்நலம் பெற வேண்டி கூட்டுப்பிரார்த்தனை செய்ய இளையராஜா, ரஜினிகாந்த், கமல்ஹாசன், வைரமுத்து, ஏ.ஆர்.ரஹ்மான் உள்ளிட்ட திரைத்துறையினர் மற்றும் உலகம் எங்கும் உள்ள இசை பிரியர்களுக்கு இயக்குநர் பாரதிராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள பாடகர் எஸ்பி பாலசுப்ரமணியத்தின் உடல் நிலையில் சற்று பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை கூறியது பலரையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளது. அவர் நலம் பெற வேண்டும் என்று ரசிகர்கள் திரைத்துறை பிரபலங்கள் என பலரும் சமூக வலைதளங்களில் தெரிவித்து வருகின்றனர். 19.08.2020 நேற்று எஸ்பிபிக்காக வீடியோ வெளியிட்ட பாரதிராஜா.

'இந்திய திரை உலகில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தன் இனிமையான குரலால் மக்களை மகிழ்வித்தும், மொழிகளை வளமைப்படுத்திக் கொண்டும் ஒரு குயில் மூச்சுவிடாமல் இன்றும் நம்மைத் தாலாட்டிக் கொண்டு இருக்கிறது என்றால் அது 'பாடும் நிலா' எஸ்.பி.பி தான்.

தற்போது அவன் கொரோனா தாக்குதலுக்கு ஆட்பட்டு முடக்கப்பட்டுள்ளான் என்று நினைக்கும் போது கண்ணீர் மல்கிறது. அவன் நிலையைக் கண்டு திரையுலக நட்சத்திரங்கள், அரசியல் பிரமுகர்கள், அனைத்து துறைக் கலைஞர்கள், பொதுமக்கள் என அனைவரும் வேதனை அடைவதை பார்த்து நெஞ்சம் பதறுகிறது. அன்பை மட்டுமே விதைக்கத் தெரிந்தவன், பண்பாளன், மாபெரும் கலைஞன். அந்த கலைஞன் மீண்டு வரவேண்டும். நாம் மீட்டு வரவேண்டும்.

நாளை மாலை 6 மணிக்கு 20.08.2020 நாளை மாலை 6 மணிக்கு அதற்காக இயற்கை அன்னையை பிரார்த்திக்கும் வகையில் தங்களுக்குப் பிடித்த எஸ்.பி.பி பாடலை ஒலிக்கவிட்டு அவர் பூரண நலம்பெற பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் உடல்நலம் குன்றி வெளிநாட்டில் சிகிச்சையில் இருந்த போது, இந்த மாதிரி ஒரு கூட்டுப் பிரார்த்தனை செய்தோம். அவர் அதிலிருந்து மீண்டு தமிழகத்தில் காலடி எடுத்து வைத்தார். அதே போல் இந்தக் கூட்டுப் பிரார்த்தனை மூலம் குரலில் பொன்மனச் செம்மலான எஸ்.பி.பியை மீட்டெடுப்போம் வாருங்கள். இனம், மொழி, மதம் கடந்து ஒரு மகா கலைஞனை மீட்டெடுப்போம். அவன் குரல் காற்றில் மீண்டும் ஒலிக்க வேண்டும். ஒன்று கூடுவோம். பிரார்த்திப்போம்.' இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



# மன அழுத்தம் குறைய அமுதகானம் பொழிந்தவர்கள்!

இந்தியாவில் கொரோனா பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நடிகர் நடிகைகள் கொரோனா விழிப்புணர்வு வீடியோக்களை வெளியிட்டு மக்களை வீட்டில் இருக்கும்படி வற்புறுத்தி வருகிறார்கள்.

கொரோனா தடுப்பு பணிகளில் டாக்டர்கள், செவிலியர்கள், போலீசார், மருத்துவ ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள் இரவு பகலாக உழைத்து வருகின்றனர். களத்தில் பணியாற்றும் இவர்களுக்காகவும் மக்களின் மன அழுத்தம் குறைக்கவும் பாடகர்கள் வீட்டில் இருந்தே பாடும் 'சங்கீத கேது' என்ற ஆன்லைன் இசை நிகழ்ச்சியை தொடக்கி அதனை இந்திய பாடகர்கள் கூட்டமைப்பு நடத்தியது.

தற்போதையை சூழ்நிலையில் நாட்டில் உள்ள முன்னணி பாடகர்கள் மூலம் மக்களின் மன அழுத்தம் கவலையை குறைக்க இந்த இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் எஸ்.பி.பாலசுப்ரமணியம், கே.ஜே.ஜேசுதாஸ், லதா மங்கேஷ்கர், ஹரிஹரன், ஷங்கர் மகாதேவன், ஆஷா போஸ்லே, உதித் நாராயணன், உள்ளிட்ட இந்தியாவின் முன்னணி பாடகர்கள் கலந்து கொண்டு வீட்டில் இருந்தே பாடினார்கள். முடிந்ததை முடிந்தவரை செய்யும் குணம் சிறந்ததே!

# பேய்ப் படமும் நயன்தாராவும்!

செம காண்டில் இருக்கும் விக்னேஷ் சிவன்? பேய் படம் ஒன்றிற்கு நடிகை நயன்தாரா கதாப்பாத்திரத்தின் பெயரை வைத்திருப்பது இயக்குநர் விக்னேஷ் சிவனை கோபமடைய செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு விக்னேஷ் சிவன் இயக்கத்தில் வெளியான படம் நானும் ரவுடி தான். இந்தப் படத்தில் நடிகை நயன்தாரா மற்றும் விஜய் சேதுபதி லீடிங் ரோலில் நடித்தனர்.

இந்தப் படத்தில் காதம்பரி என்ற கதாப்பாத்திரத்தில் காது கேளாத பெண்ணாகஅட்டகாசமான நடிப்பை வெளிப்படுத்தியிருப்பார் நடிகை நயன்தாரா. இதற்காக நயன்தாராவின் நடிப்பை பலரும் பாராட்டினர். இந்நிலையில் இந்தப் படத்தில் நடிகை



நயன்தாராவின் கதாப்பாத்திரப் பெயரான காதம்பரி என்ற பெயர் பேய் படம் ஒன்றிற்கு வைக்கப்பட்டுள்ளது.

அறிமுக இயக்குனர் அருள் இயக்கி, தயாரித்து, நடித்துள்ள இப்படத்திற்கு காதம்பரி என தலைப்பு வைத்துள்ளனர்.இந்நிலையில் காதம்பரி படத்தின் இயக்குநரான அருள் ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்துள்ளார். அதில் நானும் ரவுடி தான் படத்தில் இருந்து நயன்தாராவின் கதாப்பாத்திரத்தின் பெயரை வைத்திருப்பதாக தெரிவித்தார.; அந்தப் பெயரை வைத்ததால், இந்தப் படத்தின் டிரெய்லரை வெளியிடுமாறு இயக்குனர் விக்னேஷ் சிவனை இயக்குநர் அருள் அணுகியதாகவும் ஆனால் அவர் வெளியிட மறுத்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் காதம்பரி என்ற நயன்தாராவின் கதாப்பாத்திர பெயரை பேய் படத்திற்கு வைத்ததால்தான் விக்னேஷ் சிவன் கோபத்தில் ட்ரெயிலர் வெளியிட மறுத்ததாகவும் கூறப்படுகிறது. யார் பெற்ற பிள்ளையோ காதாம்பரி?



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.






















விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.